
# ஜாமக்காரன்
# JAMAKKARAN

ஜாமக்காரன் JAMAKKARAN

**VOLUME - 2** **Reg NO.TNBIL/2016/70171** **ISSUE - 5**

**MAY 2018 TAMIL & MALAYALAM**

**ANNUAL SUBSCRIPTION - Rs.60/= FOREIGN - Rs.600/=**




*(ஜாமக்காரனில்) எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள். 1 தெச 5:21*

*ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான், ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி 2:15.*

**0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com**

கர்த்தருக்குள் அன்பானவர்களே !



உங்கள் யாவருக்கும், நம் தேசத்துக்கும் சமாதானம் உண்டாவதாக. இம்முறை நம் இந்திய தேசத்தின் மோசமான பிரச்சனைகளை உங்களோடு பகிர்ந்துக்கொள்ளப் பாரப்படுகிறேன்.

இந்தியாவில் நடந்த தேர்தலில் **காவி கட்சியும், RSS** இயக்கத்தை சேர்ந்தவர்களான BJP கட்சியினரும் இந்திய ஆட்சியை மிருக பெலத்தோடு கைப்பற்றியப்போதே.......... நம் இந்திய தேசம் **பெரும் அழிவையும், பிரச்சனைகளையும்** சந்திக்கபோகிறது என கர்த்தருடைய பிள்ளைகள் பயந்தார்கள்.

நான் பயந்தது அது நடந்தது என்று **யோபு** கூறியதைபோல ஒன்றன்பின் ஒன்றாக இந்தியாவில் சமாதான குலைச்சல் உண்டாக ஆரம்பித்தது. **மத கலவரங்கள்** ஆங்காங்கு வெடித்தன. கிறிஸ்தவர்கள் குறிப்பாக மிஷனரிகள், **கிறிஸ்தவ சபைகள், கிறிஸ்தவ விசுவாசிகள்** பெரும் பாதிப்புக்குள்ளானார்கள்.

**500,1000 ரூபாய் செல்லாது** என்று யாரும் எதிர்பாராத நேரத்தில் திடீர் என்று அறிவித்து புதிய 2000 ரூபாய் நோட்டுக்களை சினிமா நோட்டீசுபோல அச்சிட்டு வெளியிட்டார்கள். வெளியிடப்பட்ட மறுநாளே **மாபியா கும்பல்கள்** வீட்டில் 2000 புதிய ரூபாய் நோட்டுக்கள் பல நூறு கோடிகள் கட்டுக்கட்டாக சிக்கின, பல பெரும் தொழிலதிபர்கள்,அரசியல்வாதிகள் வீட்டிலும், மந்திரிகளின் பினாமி நபர்களின் வீட்டிலும் ரூபாய் நோட்டுகள் பிடிப்பட்டன. பிடிபட்ட நோட்டுகள் அளவு மட்டுமே நமக்கு செய்திகள் மூலமாக அறிந்தோம். பிடிப்படாத ரூபாய் மூட்டைகள் எத்தனை கோடிகளோ? தெரியாது.

# MAY 2018

புதிய நோட்டு அச்சடிப்பது **பிரதமர்** அவர்களுக்கும், **நிதி மந்திரிக்கும், ஹோம் மினிஸ்டர், ரிசர்வ் பேங்க் கவர்னருக்கும்** மட்டுமே அறிந்த நாட்டு **இரகசியமாகும்.** ஆனால் ரூபாய் நோட்டு அச்சடிக்கும் இடமான **நாசிக்**கிலிருந்து புதிய **2000 ரூபாய் நோட்டுகள்** அச்சடித்த **ஒரு சில மணி நேரத்தில்** மேலே குறிப்பிட்டவர்களின் வீட்டுக்கு எப்படி வந்து சேர்ந்தன?

அதுவும் கள்ள நோட்டல்ல, அரசாங்கம் அச்சடித்த நல்ல நோட்டுகள் எப்படி இடம் மாறின? புதிய ரூபாய் நோட்டுக்கள் வங்கிக்கு போவதற்குள் இவர்களுக்கு எப்படி கிடைத்தது. பிரதமர், ஹோம் மினிஸ்டர், **நிதி மந்திரி** இவர்கள் யாரும் அறியாமல் இந்த பெரும் அரசாங்க பண கொள்ளை நடந்திருக்கமுடியாது என்கின்றனர்.

அதை உறுதி செய்வதைப்போல் 2018 ஏப்ரல் கணக்கெடுப்பில் இந்திய அரசியல் கட்சிகளிலேயே மிகப்பெரிய அளவில் **பல நூறு கோடி பணம்** BJP கட்சி வங்கி கணக்கில்தான் உள்ளதாக அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இது அல்லாமல் கணக்கில் காட்டப்படாத பல கோடி ரூபாய்கள் உண்டே. அதை யாரும் கணக்கெடுக்க முடியாதே?என்ன பயங்கரம்! அத்தனையும் பாரத தேச ஜனங்களாகிய நம்முடைய வரி பணமல்லவா?.

பல்வேறு இடங்களில் பிடிப்பட்ட புது ரூபாய் நோட்டு பணத்தின் மொத்த தொகை கேட்டால் தலைசுற்றும். அதில் ஆச்சரியம் என்னவென்றால் பணத்தோடு கையும் களவுமாய் பிடிப்பட்டவர்கள் யாரும் ஜெயிலில் இல்லை. வெளியில் சர்வசாதாரணமாக சுற்றிதிரிகின்றார்கள். விழாக்களில் மந்திரிகள் பக்கத்தில் அவர்கள் அமர்ந்திருப்பதை பத்திரிக்கை புகைப்படத்திலும், TVயிலும் காட்டுகிறார்கள். இந்த ஊழலில் இந்திய பொருளாதாரம் எப்படி உயரும்?.

■ 1000 ரூபாய் நோட்டு செல்லாது என்று அறிவித்தபின் 1000ரூபாயை கையில் வைத்துக் கொண்டிருந்த ஏழை மக்கள் சில்லரை மாற்ற முடியாமல் ஒரு டீ, காப்பிகூட வாங்கி குடிக்க முடியாதபடி இந்தியா முழுவதிலும் மக்கள் பட்டபாடுகள் சொல்லமுடியாது. வங்கியில் பணம் உண்டு, ஆனால் எடுக்க கூடாது. இது பிரதமரின் கட்டளை. என் பணத்தை நானே எடுக்க முடியாது எனறால் இது பயங்கர சர்வதிகாரம் அல்லவா?.

அந்த சூழ்நிலையில் நான் இந்தியாவிலிருந்து ஆஸ்ட்ரேலியா நாட்டுக்கு ஊழியம் செய்து இந்தியா திரும்பினேன். 100 ஆஸ்ட்ரேலியா டாலரை விமான நிலைய பணமாற்று வங்கியில் இந்திய ரூபாயாக மாற்ற முடியவில்லை. விமான நிலைய வங்கியில் இந்திய ரூபாய் 2500/- மட்டுமே ஒரு நபருக்கு கொடுக்க பிரதமரின் கட்டளை என்றார்கள். வேறு வழியின்றி 2500/-ஐ வாங்கி சென்னை ரயில் நிலையம் செல்ல TAXI க்கு பணம் கொடுத்ததுப்போக மீதி பணத்தில் உணவு சாப்பிடாமல், ஒரு சமோசாவும், வாழைப்பழமும் வாங்கி சாப்பிட்டு வீடுவந்து சேர்ந்தேன். இந்தியாவில் **அந்த பண பிரச்சனை தீர பல மாதங்களாயின.**

## கிறிஸ்தவ சபைகள் - விசுவாசிகள் குறிவைத்து தாக்கப்பட்டனர்

**சமீபகாலமாக காவி கட்சியினர்** அவிழ்த்துவிட்ட நாய்கள்போல கூட்டமாக சென்று கிறிஸ்தவ சபைகளாக பார்த்து அடித்து நொருக்கியதும், சபை மக்களை துன்புறுத்தியதும். பாஸ்டர், பாஸ்டர் மனைவி, பிள்ளைகள் ஆகிய 3 பேர்களின் உடைகளை அவிழ்த்து ஒரு

பொட்டு துணி உடலில் இல்லாதபடி, மூன்று ரோடு சந்திக்கும் இடத்தில் பல மணிநேரங்கள் பொதுமக்கள் பார்வைக்கு நிர்வாணமாக நிறுத்தி வைத்த கொடுமை. இருண்டகாடு என்றழைக்கப்படும் ஆப்பிரிக்கா நாடுகள் நாகரீகம் அடைவதற்குமுன்புகூட அங்கு இப்படிப்பட்ட நிர்வாண காட்சி நடந்ததில்லை.

பிரதமர் மோடி அவர்கள் தாரகமந்திரமாக கூறுவது இந்தியா முழுவதும் **ஒரே மொழி, ஒரே மதம், ஒரே கொள்கை,** இதுதான் **இந்துத்வா** என்ற வார்த்தைகளைதான் **காவி கட்சியினரின்** பிடிவாத கொள்கையாக இருக்கிறது.

பிரதமர் மோடி பதவிக்கு வந்தபின் வெளிநாட்டு ஸ்தாபனங்களின் உதவிபெற்று இந்தியாவில் நடைபெரும் சமூகசேவைகளை நிறுத்த கட்டளையிட்டார். **கம்பாஷன்** என்ற ஸ்தாபனத்தின் மூலமாக நடைபெற்று வந்த **சகல சமூக சேவைகளும்** முடக்கப்பட்டன. இதனால் அந்த ஸ்தாபனம் மூலம் உதவிபெறும் ஏழை சிறுவர் முன்னேற்ற பணி நிறுத்தப்பட்டு **1400 பிள்ளைகள்** மறுபடியும் அனாதையானார்கள்.

காவி கட்சியினர் பார்வையில் கிறிஸ்தவ ஆஸ்பத்திரிகள்கூட தப்பவில்லை. இந்தியாவில் **மத்திய பிரதேசம்** என்ற மாநிலத்தில் **உஜ்ஜயின்** என்ற இடத்தில் **புஷ்பா மிஷன் ஆஸ்பத்திரி & பிரசவ விடுதி** என்ற ஆஸ்பத்திரி அடித்து நொருக்கப்பட்டது.






இந்த படத்தில் தாக்கப்பட்ட அந்த ஆஸ்பத்திரியை காணலாம். 200 படுக்கைகள் கொண்ட இந்த ஆஸ்பத்திரியில் ஒவ்வொரு மாதமும் 400 பிரசவங்கள் நடைபெறுகின்றன. சுற்று வட்டாரத்தில் உள்ள ஆதிவாசிகள், ஏழை கிராம மக்கள் அத்தனை பேரும் இந்த ஆஸ்பத்திரியை ஒரு ஆலயம் போல் மதிக்கிறார்கள். 2018 கடந்த **மார்ச் மாதம்** 12ம் தேதி சுமார் 60 பேர் கொண்ட ஆட்கள் கூட்டமாக இந்த ஆஸ்பத்திரியில் நுழைந்து கூடவே JCP போன்ற கனரக வாகனத்தை கொண்டுவந்து ஆஸ்பத்திரி **கட்டிடங்களை இடித்து தள்ளியது.** உள்ளே உள்ள **மருத்துவ கருவிகளை** அடித்து நொருக்கி, **செவிலியர்,** லேடி டாக்டர்கள் மற்றும் நோயாளிகள் யாவரையும் அடித்து காயப்படுத்தி சென்றுவிட்டனர். ஏதோ பூகம்பம் ஏற்பட்டால் எப்படி இடிபாடுகள்

காணப்படுமோ அப்படி அந்த இடத்தை அதம் செய்து விட்டு முள்கம்பி வலைகளை கேட்டிலும் ஜன்னலிலும் கட்டி யாரும் உள்ளே பிரவேசிக்க கூடாது என்று எச்சரித்து சென்றனர். எங்களுக்கு கிறிஸ்தவ ஆஸ்பத்திரி வேண்டாம். மறுபடியும் இந்த இடத்தில் ஆஸ்பத்திரி நடைபெற கூடாது என்று எச்சரித்துவிட்டு சென்றனர்.

**கத்தோலிக்க பிஷப்மார்** ஒன்று கூடி இந்திய அரசாங்கத்துக்கும், **பிரதமர், ஜனாதிபதி, சுப்ரீம் கோர்ட்** ஆகிய எல்லாருக்கும் தங்கள் கண்டனங்களை தெரிவித்து தாக்கியவர்கள் மீது, நடவடிக்கை எடுக்க மனு கொடுத்தனர்.

அதுபோல **காஷ்மீர் ஜம்முதாவி, உதம்பூரில்** சில இடங்களில் உள்ள கிறிஸ்தவ சபைகளுக்கு இவர்கள் கூட்டமாக சென்று சில ஆலயங்களை எரித்துப் போட்டனர். **ஜம்முவில்** ஒரு கிறிஸ்தவ சபையில் உள்ள மரித்த விசுவாசி ஒருவரின் சடலத்தை புதைக்க கல்லறையை நோக்கிசென்ற விசுவாசிகள் கூட்டத்தை அடித்து காயப்படுத்தினர். அடக்க ஆராதனைக்கு வந்தவர்கள் சிதறி ஓடவில்லை. அந்த பிணத்தை ஆராதனைக்கு வந்தவர்களைகொண்டு தூக்க வைத்து ஆராதிக்கிற ஆலயத்துக்கு முன்புறம் உள்ள வாசலிலேயே குழிவெட்டி புதைக்கசெய்து அதோடு நிறுத்தாமல் அந்த கூட்டம் ஆலயத்துக்குள் சென்று மேஜை நாற்காலி, சிலுவை யாவையும் உடைத்து நொருக்கியது. அப்போதும் ஆத்திரம்தீராமல் அந்த ஆலயத்தையே நெருப்பு வைத்து எரித்துவிட்டார்கள். அதன் பிறகுதான் அந்த **காவி கட்சி** அந்த இடத்தை விட்டு நகர்ந்தது. சுதந்திர இந்தியாவில் **இமயமலைபிரதேசத்தில்** இப்படி ஒரு கொடுமை நடந்தது. போலீசை உதவிக்கு அழைத்தும் அவர்கள் அதை கண்டுகொள்ளவில்லை. வேறு யாரிடம் சொல்வது ?

▣ வட இந்தியாவைபோல் தமிழ்நாட்டிலும் சபைகள் தகர்க்கப்படுகின்றன. **மதுரை** கூடல் நகர் சபையின் **பாஸ்டர், பாஸ்டரின் மனைவி ஆகியவர்கள் இந்து முன்னனி** தீவிரவாதிகளால் தாக்கப்பட்டு ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருக்கின்றனர். தமிழ்நாட்டு கிறிஸ்தவர்களையும் இவர்கள் விட்டுவைக்கவில்லை. இந்தியாவில் சிறுபான்மை மக்களாகிய கிறிஸ்தவர்களின் நிலை பார்த்தீர்களா? வழக்கம்போல் மோடி மௌனம் காக்கிறார்.

# உச்சநீதிமன்றம்:

இந்து மதத்தை தாய் மதம் என்று கூறி கிறிஸ்தவ சபை மக்களை **இந்து** மதத்துக்கு மாறவேண்டும் என்ற வெறிதனத்தில் **ஹிமாச்சல பிரதேசம்,உத்திர பிரதேசம்,குஜராத், ஜார்கண்ட்** ஆகிய மாநிலங்களில் காவி கட்சியினர் நடத்தும் வெறியாட்டம் எல்லை மீறி போய்விட்டது. பல சபைகளை தாக்கி, சபை மக்களை திரும்ப சபைக்கு வரகூடாதபடி பயமுறுத்தி வைத்திருக்கிறார்கள்.

இந்து **சன்னியாசிகளையும், சாதுக்காளையும்** திரு.மோடி அவர்கள் மத்திய மந்திரிகளாக்கி வைத்துள்ளனர். உத்திரபிரதேச முதல்வர்.**யோகியும்** அந்த இந்து சன்னியாசி கூட்டத்தில் ஒருவராகும். மத்திய பிரதேசத்தில் 6 இந்து சன்னியாசிகளை மந்திரிகளாக்கியுள்ளனர். எப்படியாவது இந்தியாவில் **இந்துத்துவம்** கொள்கை செயல்ப்படுத்தபடவேண்டும் என்ற வெறியில்

அலைகிறார்கள். மேலும் **யோகா** மூலமாக அழிந்துக்கொண்டிருக்கும் **சூரியனை** இந்திய மக்கள் நமஸ்கரிக்க செய்யவேண்டும் என்று இந்தியாவின் அனைத்து **பள்ளிக்கூடங்களிலும் யோகாவை** கட்டாயப்பாடமாக்க **கல்வி அமைச்சகமும், கல்வி அதிகாரிகளும்** முயன்று கொண்டிருக்கின்றனர்.

# ஜாதி:

இவ்வருடம் **10 வகுப்பு CBSE படிக்கும்** மாணவர்களின் பரீட்சைகளில் இடம் பெற்ற கேள்வி என்ன தெரியுமா?.

இந்துமத சட்ட வேதமாகிய **வருணஸ்ரமத்தில்** குறிப்பிடும் **தாழ்ந்த ஜாதியாக** கருதப்படுவர்கள் யார்? A,B,C,D என்று நான்கு ஜாதிகளை குறிப்பிட்டு மாணவர்களை பதில் எழுத சொல்லியிருக்கிறார்கள்.

பிஞ்சி உள்ளத்தில் **ஜாதி துவேஷத்தை** எப்படி பதிய வைக்கிறார்கள். பாருங்கள்!. என்ன அநியாயம் இது!. கேட்பார் இல்லாமல்போனதே!. அந்த கேள்விக்கு பதில் எழுதிய **தாழ்ந்த ஜாதி** மாணவர்களின் மனநிலை எப்படி பாதிக்கப்பட்டிருக்கும் என்று யோசித்துபாருங்கள். முழு இந்தியாவிலும் கட்டவிழ்க்கப்பட்ட **பேய்களும், பிசாசுகளும்** ஆடி திரிவதைபோல் மத்திய அரசாங்க மந்திரிகளும், மாநில அரசாங்க மந்திரிகளும் மக்களின் சமாதானத்தை கெடுக்க பேயாய் அலைகிறார்கள்.

## நாங்கள் இந்துமத்தினர் அல்ல:

கர்த்தர் கிரியை செய்ய ஆரம்பித்துவிட்டார் என்பதை சில சம்பவங்கள் மூலம் அறியமுடிகிறது. **இந்தியாவில்** சுமார் **5 வகை மதத்தினர்** தாங்கள் **இந்து மதத்தை சேர்ந்தவர்கள் அல்ல** என்று பகிரங்கமாக அறிவித்து அவர்கள் யாவரும் இணைந்து போராட்டத்திலும் இறங்கிவிட்டனர். இவர்களில் பெரும்பான்மையானவர்கள் இந்தியாவில் இந்து என்ற மதமே கிடையாது என்கிறார்கள். இது BJP கட்சிக்கு பெரும் சாட்டையாடியாக மாறியது. அதில் முதன்மையானவர்கள் **கர்நாடாகாவில்** மிகுதியாக பரவியிருக்கும் **லிங்காயத்துகளாகும்.** இந்துத்துவா என்று கோஷமிடுபவர்கள் BJP,RSS காவிகட்சிகள் குறிப்பிடும் எந்த **தெய்வங்களையும், விக்கிரகங்களையும் நாங்கள் வணங்குவதையில்லை** என்று போர் கொடி உயர்த்தியுள்ளனர். இதை கர்நாடகா அரசு அங்கிகரித்துவிட்டது. **லிங்காயத்துக்காரர்கள் இந்துக்கள் இல்லை** என்று கர்நாடகா அரசாங்கமே ஏற்றுக்கொண்டதாக கடந்த மாதம் கர்நாடாகா மாநிலத்தின் முதன்மந்திரி அறிவித்துவிட்டார்.

அப்படியே **வைணவர்கள்,சீக்கியர்கள்,சைவர்கள்,பௌத்தர்கள், சமணர்கள்,பழங்குடி** மக்களாகிய **ஆதிவாசிகள்** இவர்கள் யாவரும் இந்து மதத்தினர் கூறும் தேவர்களை வணங்குவதில்லை. இவர்கள் யாவரும் வெவ்வேறு கடவுகளை தங்கள் **தேவனாக** ஆராதிப்பதாக அறிக்கை சமர்பித்துள்ளனர்.

இப்படி முழு இந்தியாவிலும் பல்வேறு சமுதாயத்தினர் பல்வேறு தெய்வங்களை ஆராதிக்கும்

போது இந்தியாவில் பிறந்து வளர்ந்து வாழ்ந்துவரும் **இஸ்லாமியர்,கிறிஸ்தவர்கள்,பாரசீகர்கள்** யாவரும் **இந்துக்கள்** அல்லவே! பின் எப்படி **இந்துத்துவா** என்ற **இந்துமத தத்துவத்தை** காவிகட்சியினர் நம் மீது திணிக்கமுடியும்.

இந்த BJP கட்சி தலைவர்கள் **பிரதமர் முதல் மந்திரிகள், சட்டமன்ற உறுப்பினர், பாராளுமன்ற உறுப்பினர்** வரை இந்து மதத்தை மறைமுகமாகவும்,வெளிப்படையாகவும் இந்திய மக்களிடம் திணிக்க முயலுகின்றன. இதனால் இந்திய நாடெங்கும் **கலவரம்,கொலை, கொள்ளை,கற்பழிப்பு** பெருகி இந்தியாவில் சட்டம் ஒழுங்கு கெட்டுப்போய்விட்டதால் **அமெரிக்க அதிபர்.டிரம்ப்** அவர்கள் இந்திய பிரதமர்.**மோடி** அவர்களை எச்சரித்துள்ளார். இந்தியாவில் **இப்பிரச்சனை தொடர்ந்தால் நாங்கள் தலையிடவேண்டிவரும்** என்று வெளிப்படையாக எச்சரித்துவிட்டார். உலகமே இந்தியாவில் நடக்கும் **அட்டூழியங்களை,ஊழல்களை** கவனித்து வருகிறது. உலக நாடுகளில்உள்ள யாரும் இந்தியாவில் தொழில் தொடங்க பயப்படுகிறார்கள். பொருளாதார வீழ்ச்சி மிக அதிகமாகிக்கொண்டேபோகிறது.

## மிகப்பெரிய அதிர்ச்சி தகவல்.

**பிரதமர்.மோடி** அவர்கள் இந்தியாவில் மிகப் பெரிய அதிகாரம் படைத்த உச்சநீதிமன்றத்தை (Supreme Court) தன் கட்டளைபடி செயல்பட **கொலிசியம்** முறையில் நீதிபதிகளை தேர்ந்தெடுப்பதை மாற்றி மத்திய அரசாங்க அங்கத்தினரும், **நீதிபதிகளை** தேர்ந்தெடுக்கும் குழுவில் இருப்பார்கள் என்றார். நல்ல வேலையாக உச்ச நீதிமன்ற நீதிபதிகள், உயர் நீதிமன்ற நீதிபதிகள் யாவரும் அதை முழு மூச்சுடன் எதிர்த்ததால் **உச்ச நீதிமன்ற நீதிபதிகள்** திரு. மோடி அவர்களுக்கு **கீழ்படிந்தவர்களாக, அடிமைகளாக** மாறாமல் காக்கப்பட்டார்கள் என்றாலும், சில நீதிபதிகள் பிரதமர் **மோடியின்** சொல்படி நடப்பவர்களாக பணியாற்றுவதை **காவிரி மேலாண்மை** அமைப்பதைக்குறித்த தீர்ப்பை **கர்நாடகா தேர்தல் முடியும் வரை** தள்ளிப்போடப்படுவதை அறியும்போது பிரதமர் **மோடியின்** சொல்லுக்கு கீழ்படிபவர்கள் **கருப்பு ஆடுகளாக** உச்சநீதிமன்றத்திலும்,நீதிபதிகளாக அமர்ந்திருக்கிறார்கள் என்று கேள்விப்படுகிறோம்.

பிரதமர்.**மோடி** இந்திய சர்வாதிகாரியாக முயலுகிறார். இலங்கை முன்னாள் ஜனாதிபதி.ராஜபக்ஷே உச்சநீதிமன்றத்தை தன் கட்டுப்பாட்டுக்குள் வைக்க முயன்றாரே!. அதைப்போல மோடி அவர்கள் சர்வாதிகாரியத்தை மறைமுகமாக முயற்சிகளை செய்வதாக நடந்துக்கொண்டிருக்கும் சம்பவங்கள் நமக்கு அறிவிக்கின்றன.

உலக சர்வாதிகாரிகளான **வடகொரிய அதிபர், ரஷ்ய அதிபர்,சீன அதிபர்** வரிசையில் திரு.மோடி அவர்களும், **சர்வாதிகாரியாக** மாறினால் பெரும் ஆபத்து முதலில் **முஸ்லீம் மற்றும் கிறிஸ்தவர்களுக்கு**தான் இந்த எச்சரிக்கை பொருந்தும். இதற்காக தினமும் ஜெபிப்போம்.

▣ இந்த நிலையில் முழு இந்திய மக்களுக்கு இருக்கும் **ஒரே நம்பிக்கை** நீதிமன்றம்தான். ஆனால் அந்த நீதிமன்றமும் **காவி கட்சியின்** குறிப்பாக பிரதமர் மோடியின் கண் அசைவின்படிதான் நடக்கிறதாக சில சம்பவங்கள்மூலம் யூகிக்கப்படுகிறது.

சமீபத்தில் உச்ச நீதிமன்றம் ஒரு தீர்ப்பை அறிவித்தது, அதாவது இந்தியாவில் **சிறுபான்மை தலித்** ஆகிய **தாழ்த்தப்பட்ட மக்கள்** தங்களுக்கு யாராவது **அநீதி இழைத்தாலோ, கொடுமைப் படுத்தினாலோ** அதைக்குறித்து போலீஸ் ஸ்டேசன் சென்று புகார் செய்தால் அந்த புகாரின்பேரில் FIR பதிவுசெய்யக்கூடாது என்றும் **தலித்** தாழ்த்தப்பட்ட சமூகத்தினரை தாக்கிய **நிலச்சுவான்தார்கள், உயர் குலத்தவர்** யாரையும் கைது செய்யக்கூடாது. குற்றச்சாட்டை விசாரித்தால்போதும் தவறுசெய்தவர்களை உடனே கைது செய்ய கூடாது என்பதுதான் அந்த தீர்ப்பின் சாராம்சம்.

இப்படிப்பட்ட தீர்ப்பின் மூலம் முழு இந்தியாவில் **BJP ஆட்சியினருடன் நீதிமன்றமும்** அதிலும் **உச்சநீதிமன்றமும்** இணைந்து **தாழ்த்தப்பட்ட** இனத்தவருக்கும், **தலித்** சமூகத்தினருக்கும் நீதி கிடைக்காதுபோக செய்துவிட்டது. இனி அவர்களின் **கதறல்கள்** போலீஸ் ஸ்டேஷனிலேயே அமுக்கி வைக்கப்படும். இப்படிப்பட்ட தீர்ப்பை கூறியது சாதாரண நீதிமன்றம் அல்ல. **உச்ச நீதிமன்றத்தின்** முதன்மை **நீதிபதியாகும்.**

இந்தியாவில் RSS என்ற இந்துமத தீவிரவாதிகள் பல வருடங்களுக்கு முன்னரே முன்னாள் பிரதமர் **வாஜ்பாய்** அவர்கள் பதவியில் இருந்தபோதே பெரும்பாலான RSS இயக்கத்தினரை **நீதிபதிகளாக** நீதிமன்றங்களில் அவர்கள் திட்டமிட்டு **நுழைத்துவிட்டனர்.** அந்த கூட்டத்தில் ஒருவர்தான் **தலித்துக்கு** எதிராக தீர்பளித்த **தலைமை நீதிபதியாகும்** என்று அரசியல் வல்லுநர்கள் சிலர் ஆதாரத்துடன் கூறியதாக கேள்விப்பட்டேன்.

இந்த இரகசியத்தை அறிந்த **உச்ச நீதிமன்ற** நீதிபதிகளில் சிலர் திரு. **சலமேஸ்வர், ரஞ்சன் கோகோய், எம். பி. லோகூர், குரியன் ஜோசப்** (கேரளா) ஆகியவர்கள் **தலைமை நீதிபதிக்கு எதிராக** அந்த உச்ச மன்றத்தில் வழக்குதொடுத்தார்கள். இரண்டு நீதிபதிகள் கொண்டபென்ச் அவர்களுக்கு எதிராக தீர்ப்பளித்து சகல உரிமையும் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதிக்கு உண்டு என்று கூறிவிட்டனர். உச்சநீதிமன்ற நீதிபதியின் தீர்ப்பைப்பற்றி யாரும் கேள்வியும் கேட்ககூடாது என்றும் அறிவித்தனர்.

⊡ **அதிபதியானவன் (நீதிபதி) பொய்களுக்கு செவி கொடுத்தால் அவன் ஊழியக்காரர்** யாவரும் **துன்மார்க்கர்கள்** ஆவார்கள். நீதி 29:12

உச்சநீதிமன்றத்தின் இந்த குறிப்பிட்ட தீர்ப்பினால் இந்திய நாடே கொந்தளித்தது, **போராட்டங்கள் வெடித்தன. தாழ்த்தப்பட்டோர்** தலித் **சமூகத்திற்கு** எதிரான தீர்ப்பை **திட்டமிட்ட சதி** என்றார்கள். மத்திய பிரதேசம், உத்திர பிரதேசம் இன்னும் பல மாநிலங்ககளில் போராட்டக்காரர்களால் மாநிலங்கள் தீப்பற்றி எரியத்தொடங்கின. துப்பாக்கி சூட்டில் பலர் இறந்தனர். இதை எழுதிக்கொண்டிருக்கும் 2018 **ஏப்ரல் 12ம் தேதி வரை** போராட்டம், ரயில் மறியல் நின்றபாடில்லை.

## காவிரி மேலாண்மை தீர்ப்பாயம்

காவிரி தீர்ப்பாயம் வழக்கு முடிந்தது. ஆனால் உச்ச நீதிமன்ற நீதிபதி தனது தீர்ப்பை **காவி கட்சிக்கு சாதகமாக கர்நாடகா** தேர்தலுக்குபிறகு கூறும் வகையில்

தள்ளிவைத்துக்கொண்டே இருக்கிறார் என்று தமிழ்நாட்டு மக்கள் நினைக்கிறார்கள். இதனால் தமிழ் நாடெங்கும் போராட்டம வெடித்தது. கிரிக்கெட் விளையாட்டு ஆடும் இடம் மாற்றப்பட்டது. **மாணவர்களும்** காவேரி தீர்ப்பாயத்துக்காக போராட்டத்தில் இறங்கிவிட்டனர். **மருத்துவர்** ஆசிரியர்கள், **பஸ் தொழிலாளர்கள்** இப்படி தமிழ்நாட்டு மக்கள் அத்தனை பேரும் திரு. **மோடிக்கு** எதிராகவும் **மத்திய அரசுக்கு** எதிராகவும் போராடிக்கொண்டிருக்கிறார்கள்.

இந்த சூழ்நிலையில் கிறிஸ்தவர்களாகிய நாம் என்ன செய்யலாம்! உடனே இதை வாசிக்கிற நீங்கள் கூறுவீர்கள் நாம் **ஜெபிப்போம்** என்பீர்கள். **உபவாச ஜெபம்** என்பீர்கள், ஆம் கிறிஸ்தவர்கள் நாம் யாவரும் இயேசுவின் வழியையே பின்பற்ற வேண்டும். மதுரை கூடல்நகர் பாஸ்டர் **இந்து முன்னனியினரிடம்** கூறியது என்னவென்றால் என்னை அடித்துவிட்டு போங்கள் என்றார். ஆம். நாம் அதைத்தான் செய்தாக வேண்டும். **அநீதி** நடப்பதை அறிந்த பவுல் ரோம அரசுக்கு மேல்முறையீடு செய்தார். அவ்வளவுதான் நம்மால் செய்யமுடியும். அதே **பவுலும் சிலாவும்** சிறைச்சாலையில் மேல்முறையீடு செய்யாமல் கசையடிபட்டார்களே? அவர்கள் மேல் முறையீடு எதையும் செய்யவில்லை.

இன்றைய நம் கிறிஸ்தவ திருச்சபை இரத்த சாட்களின் **மரணத்தாலும்,** அவர்கள் சிந்திய இரத்தத்தாலுமே வளர்ந்தது ஆகும். ஆனால் இப்போது நாம் என்ன செய்துகொண்டிருக்கிறோம். ஒவ்வொரு சிறிய பிரச்சனைக்கும் பொருமை இழந்து, சகிப்புதன்மை அற்று நீயா? நானா? பார்த்துவிடுவோம் என்கிற வைராக்கியத்தோடு சபைக்குள்ளேயே ஒருவருக்கொருவர் கட்டிபுரண்டு கொண்டிருக்கிறோம். இப்படிப்பட்ட **சபை** செயலர் **டையோசிஸ்** செயலர் **பிஷப்மார்,** ஆயர்கள், **மாடரேட்டர்** யாவரும மேலே குறிப்பிட்டபடிதான் நம் கோபத்தை, வைராக்கியத்தை நம் கசப்பை **உலகுக்கு காட்டிக்கொண்டிருக்கிறோம்.**

▣ கிறிஸ்து இயேசுவுக்குள் **தேவபக்தியாக நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்** என்று வேதம் கூறுகிறது. 2 தீமோ 3:12 பவுல் தன் சீஷன் தீமோதேயுக்கு **தீங்கனுபவி** என்று ஆலோசனை கூறுகிறார். 2 தீமோ 2:3 1தீமோ 1:8.

கிறிஸ்துவனிடத்தில் நீங்கள் விசுவாசிக்கிதற்கு மாத்திரமல்ல அவர் நிமித்தமாக **பாடுபடுகிறதர்க்கும்** உங்களுக்கு அருளப்பட்டிருக்கிறது. பிலி. 1:29 என்று வேதம் ஆலோசனை கூறுகிறது. துன்பப்பட வேண்டியது அவசியம். 1. பேது 1:6 என்றும் கூறுகிறது.

இயேசு கிறிஸ்து ஊழியர்களை பார்த்து கூறும்போது இந்த உலகம் அல்லது புறமதத்தினர் உங்களை காரணம் இல்லாமல் தாக்கும்போது எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்று கூறியிருக்கிறார் என்பதை வேத வனத்தை வாசித்து அறியுங்கள். இதுதான் கிறிஸ்துவின் வழி.

ஆனால் இஸ்லாமியர்களின் உபதேசம் தலைகீழ் உபதேசம். **ஜிகாத்** என்ற அழைக்கப்படும் **புனித போர்** ஆகும். தங்கள் மதத்துக்கு, அல்லாவுக்கு விரோதமாய் பேசினாலோ, எழுதினாலோ அது தன் மகனானாலும், பெற்றோரானாலும் கொன்றுவிடவேண்டும். அப்போது அவர்களுக்கு சொர்க்கம் நிச்சயம் என்கிறது. ஆனால் கிறிஸ்துவின் வழியோ **சிலுவையின் வழியாகும்** லூக் 6:27-36 இந்த வசனங்களை வாசித்துப் பாருங்8ள்.

# கர்த்தரால் அனுப்பபட்டவர்கள் துன்பப்படுத்தப்படுவார்கள்.

உங்களை **நீதிமன்றங்களுக்கு** கொண்டுபோவார்கள்...**உங்களை சாட்டையால் அடிப்பார்கள்... என் நிமித்தம் ஆளுனரிடம் (அதிகாரிகளிடமும்) இழுத்து செல்வார்கள் அப்படி செய்வதால்தான் நீங்கள் புற மதத்தினர்முன் கிறிஸ்துவின் சாட்சியை காண்பிக்க முடியும்.** அப்படி அதிகாரிகளிடத்தில் நீங்கள் ஒப்புக்கொடுக்கப்படும்போது அவர்களிடம் என்ன மாதிரி பேசுவது? எப்படி பேசுவது? என்பதை குறித்து கவலைப்படவேண்டாம். அவர்களிடம் எப்படிப்பட்ட பதிலை கூறவேண்டும் என்பதை குறித்து அந்த குறிப்பிட்ட சமயத்திலேயே உங்களுக்கு அருளப்படும். காரணம்.பேசுவது நீங்கள் அல்ல. உங்கள் உள்ளேயிருந்து **பரிசுத்த ஆவியானவர்** உங்களுக்கு பதிலாக பேசுவார். மத். 10:17,20 (கத்தோலிக்க வேதம்.)

மேலே குறிப்பிட்டது ஒரு அற்புதமான அனுபவம். இதை இயேசு **தீர்க்கதரிசனமாக** அன்றே குறிப்பிட்டார். ஒரு சிறு உதாரணம்: வட இந்தியாவில் கிறிஸ்தவ விசுவாசிகளான ஆதிவாசிகளையும் மிஷனரிகளையும் பிடித்து நீதிமன்றத்தில் நிறுத்தினார்கள். நீதிபதி ஆதிவாசி கிறிஸ்தவர்களை பார்த்து கேட்டார். **இந்துக்களாகிய** உங்களை இந்த **மிஷனரிகள்** கட்டயப்படுத்தி **மத மாற்றம்** செய்தார்களா? என்ற கேட்டார். அதற்கு பதிலாக கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட அந்த ஆதிவாசிகள் கூறினார்கள்.

ஐயா, உங்கள் கேள்வியே பிழையானது, எங்களை **இந்துக்கள்** என்று குறிப்பிட்டது மிகவும் தவறு, எங்களுக்கு **கிருஷ்ணனையும்** தெரியாது, **ராமனையும்** தெரியாது. நாங்கள் **ஆவிகளை** ஆராதிப்பவர்கள். அப்படியிருக்க எங்களை **இந்து மதத்தினர்** என்று குறிப்பிட்டது தவறு என்றவுடன் நீதிபதி அதிர்ந்துபோய் வேறு கேள்விகள் எதையும் கேட்காமல் **இந்துக்கள்** அல்லாதவர்களை **இந்துக்கள்** என்று கூறி குற்றம் சுமத்திய **பஜ்ரங்தல்** என்ற இந்து தீவிரவாத இயக்கத்தினரையும் இவர்கள் பேச்சை நம்பி FIR குற்ற அறிக்கை சமர்பித்த **போலீஸ் அதிகாரிகளையும்** இந்த கோர்ட் வன்மையாக கண்டிக்கிறது என்று கூறி இந்த வழக்கை தள்ளுபடி செய்து ஆதிவாசிகளையும் மிஷனரிகளையும் விடுதலை செய்கிறேன் என்ற தீர்ப்பு கூறினார்.

நீதிமன்றத்தில் **மிஷனரிகளுக்காக** வாதாட வக்கில்கள் யாரும் முன்வரவில்லை. இந்த தீவிரவாதிகளைக் குறித்த பயத்தினால் வக்கீல்கள் வாதாட முன்வரவில்லை. **ஆதிவாசிகளின்** நிலையும் அப்படியே!. அந்த ஆதிவாசிகளுக்கு நீதிபதியிடம் எப்படி பதில்கூற வேண்டும் என்று எந்த வக்கீலும் சொல்லிக்கொடுக்கவில்லை. நடப்பது நடக்கட்டும் என்று **கர்த்தர் மேல் பாரத்தை** வைத்து ஜெபித்து நீதிபதிகள்முன் நின்றார்கள். குடும்பமாய் சாராயத்தை குடித்து தங்கள் குழந்தைகளுக்கும் குடிக்க கொடுத்து பழகிய அந்த மக்கள் **மிஷனரிகள் மூலமாக** இயேசுவை ஏற்றுக்கொண்டு பரம்பரை **குடிபழக்கத்தை** ஒரே நாளில் நிறுத்தி மனந்திரும்பினர். அந்த மக்கள் உள்ளத்தில் எபே. 1:13ன்படி அவர்களின் உள்ளத்தில் ஆவியானவர் உள்ளே நுழைந்துவிடுகிறார். **நீதிமன்றத்தில் நீதிபதியின்முன்** அந்த **ஆவியானவர்தான்** அந்த சமயத்திற்கு ஏற்ற பதிலை

(எழுதப்படிக்க தெரியாத) அந்த ஆதிவாசிகளின் வாய் வழியாய் நீதிபதியிடம் ஆவியானவர்தான் தக்க பதிலை கூற உதவினார். இதைத்தான் இயேசு கிறிஸ்து அன்று கூறினார். **பேசுகிறவர் நீங்களல்ல. பரிசுத்த ஆவியானவரே உங்களுக்கு பதில் பேசுவார்** என்று கூறினார். இன்றும் கர்த்தருடைய பிள்ளைகள் **இந்து முன்னணியினரால்** தாக்கப்படும்போது அவர்களிடம் நியாயத்தை கூறுங்கள். அதையும் ஞானமாய் கூறுங்கள்.

■ சமீபத்தில் **ஆப்பக்கூடல்** (ஈரோடு மாவட்டம்) CIGM சபை விசுவாசிகள் சிலர் முனிசிபாலிட்டியில் வேலை செய்கிறார்கள். கடந்த மாதம் முழுவதும் இந்து முன்னணியினர் இவர்களைப்பார்த்து நீ என்ன ஜாதி? எப்படி கிறிஸ்தவனாய் மாறினாய்? இப்போது நீ கிறிஸ்தவனா? என்று கேட்டு போலீஸ் ஸ்டேசன்வரை அவர்களை **இந்து முன்னணியினர்** அழைத்து சென்றனர். எனது தொலைபேசியில் அந்த ஏழை முனிசிபால் நகராட்சி தொழிலாளி பேசினார். என்ன பதில் கூற வேண்டும் என்று பதற்றத்தோடு என்னிடம் கேட்டார். நான் சொன்னேன். ஒரு சின்ன ஜெபம் மனதில் செய்துகொண்டு உங்களிடம் கேள்விகேட்டவரிடம் நீங்கள் யார்? உங்களுக்கு நான் ஏன் பதில் கூற வேண்டும் என் மேல்அதிகாரிகளுக்கு என் ஜாதியைப்பற்றி சந்தேகம் இருக்குமானால் எழுத்து மூலமாக அவர் கேட்கட்டும். முன்பின் தெரியாத உங்களுக்கு நான் பதில் கூற விரும்பவில்லை என்று முரட்டுதனமாக கூறாமல் **சாத்வீகமாக கூறுங்கள்** என்றேன். அப்படியே பதில் கூறினர். போலீஸும் அந்த கூட்டத்தினரை கலைந்துப்போக கூறி இந்த கிறிஸ்தவ சபை விசுவாசிகளையும் வெறுமனே அனுப்பிவிட்டார். இப்படிப்பட்ட நிர்பந்தமான சூழ்நிலைகள் கர்த்தருடைய பிள்ளைகளுக்கு வரும். உங்கள் சர்டிப்பிகேட்டில் எழுதப்பட்ட ஜாதி பிரச்சனையைப்பற்றி குறிப்பிடும் இடத்தில்தான் அரசாங்க வேலைக்கும் ஆபத்து வரும். உங்கள் பதில்கள் ஞானத்தோடும் எச்சரிக்கையோடும் இருக்கட்டும்.

இப்போது **கலெக்டர் அலுவலகங்களிலும்,அரசாங்க ஆஸ்பத்திரியிலும்** வேலை செய்பவர்களின்,படிப்பு சர்ட்டிப்பிகேட்களை போட்டோ காப்பி எடுத்து அவைகளை **இந்து முன்னணி** அலுவலகத்துக்கு அனுப்ப ஆட்கள் அலைந்து கொண்டிருக்கிறார்கள். **தலித் கிறிஸ்தவர்கள் - தாழ்ந்த ஜாதி** பட்டியலில் உள்ளவர்களும் கிடைக்கும் அரசாங்க சலுகைகளை பெற்று படித்து முடித்து தாசில்தாராகவும், டாக்டர்களாகவும் பல உயர்ந்த பதவிகளிலும் வேலை செயகிறார்கள். இப்போது அவர்கள் கண்காணிக்கப்படுகிறார்கள். இதற்கு பயந்து கொண்டு ஆலயத்துக்கே வராமல் விட்டுக்குள்ளேயே வேதம் வாசித்து ஜெபித்த பலரை நான் சந்தித்தேன்.

பயம் வேண்டாம். நாம் சுதந்திர ஜனநாயக நாட்டின் பிரஜைகள். நாம் எந்த குடும்பத்தில் எந்த ஜாதியில் பிறந்து வளர்ந்திருந்தாலும் நம் இந்திய மத உரிமை சட்டத்தின்படி யாரும் எந்த **தெய்வத்தையும்** ஆராதிக்கலாம். **சுவிசேஷம்** அறிவிக்கலாம். சபை நடத்தலாம். ஆனால் **ஜாதி** என்ற பிரச்சனை வரும்போது எழுத்திலும்,வார்த்தையிலும் நீங்கள் அகப்பட்டுக் கொள்ளதபடி ஞானமாக நடந்துகொள்ளவேண்டியது அவசியம்.

**ஜாதியை** குறித்து **பொய்யான தகவலை** அரசாங்கத்துக்கு அறிவித்து அரசாங்க சலுகைகளை அனுபவிக்கிறீர்கள் என்ற அடிப்படையில் உங்களை அவர்கள் சிக்கலில் அகப்படுத்த முடியும். இவைகளிலும் **நான் சாட்சியை** காண்பிப்பேன்.. **நஷ்டங்களை** ஏற்றுக்கொள்ள தயார்

என்று வைராக்கியமாக உங்களுக்கு **கூற தைரியம் உண்டானால் என்னை நேரில் சந்தித்து** வசன அடிப்படையில் அதற்கான ஆலோசனையை பெற்றுக்கொள்ளலாம்.

**நம் இந்திய தேசத்தில் எங்கும்**
**சுவிசேஷம் அறிவிக்க தடையில்லை**
**வாடகை வீட்டில் ஆராதனை நடத்த தடையில்லை**
**துண்டு பிரதிகள் வினியோகிக்க தடையில்லை**

கிறிஸ்தவர்களாகிய நமக்கு நம் **இந்திய மத உரிமை சட்டம்** என்ன கூறுகிறது என்ற விவரங்களை கீழே வெளியிடுகிறேன். இவைகளை காப்பி எடுத்து உங்களை தடை செய்பவர்களிடமோ, காவல் துறையிடமோ காட்டி அவர்களை அறிவுறுத்தலாம்.

# நற்செய்தி அறிவிக்கத் தடையில்லை

நம் சக இந்தியருக்கு கர்த்தராகிய **இயேசு கிறிஸ்துவைப்பற்றி சொல்லுவதற்கும் நற்செய்திக் கைப்பிரதிகள்** வழங்குவதற்கும் நம் இந்திய அரசியல் சாசனத்தின்படி நமக்கு பூரண சுதந்திரம் வழங்கப்பட்டிருக்கிறது. இந்த மத உரிமையை கிறிஸ்தவர்கள் சரியாக புரிந்துக்கொண்டு நம் திருநாட்டின் சட்ட விதிகளுக்கு உட்பட்டு அச்சமின்றி அன்புடன் சுவிசேஷப்பணியில் ஈடுபடுவதற்கென்றே இந்த செய்திக்குறிப்பு.

இந்திய மத உரிமைச்சட்டம் 25ம் விதியின்படி ஒருவர் **கிறிஸ்தவ மத போதனைகளை** ஏற்றுக்கொண்டு **கிறிஸ்தவ** மதக்கோட்பாடுகளைப்பற்றி பிரச்சாரம் செய்யவும் இது தொடர்பான இலக்கியப்பிரதிகளை எங்கும் எல்லாருக்கும் விநியோகம் செய்யவும் அரசியல் சாசனம் 19ன்படி உரிமை உண்டு.

இச்செயல்களை யார் தடுத்தாலும் அவர்கள்மீது சட்டத்தின்படி **அரசியலமைப்புச் சட்டத்தை மீறுகிறார்** என்று காவல் நிலையத்தில் புகார் தெரிவிக்கலாம்.

இந்திய சம உரிமைச் சட்டம் 14ம் விதியின்படி **நம் வீட்டில் அல்லது வாடகை வீட்டில் ஆராதனை நடத்துவதற்கும் அனுமதி உண்டு.** இதை சென்னை உயர் நீதிமன்றத்தில் மாண்புமிகு நீதிக்கரசர் **எம்.வேணுகோபால்** அவர்கள் 27-11-2014ல் வழங்கிய தீர்ப்பின் ஆறாம் பத்தியில் **கிறிஸ்தவர்கள் தங்களது வீடுகளில் ஆராதனை நடத்துவதற்கு எந்தவொரு முன் அனுமதியும் பெற வேண்டிய அவசியம் இல்லை** என்று தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

மாண்புமிகு நீதிக்கரசர் தினகரன் அவர்கள் 2004ல் வழங்கிய ஒரு தீர்ப்பில் இந்திய அரசியல் சட்டம் 25ன் கீழ் **கிறிஸ்தவர்கள் வழிபாடு நடத்துவதற்கு ஆலயம் கட்ட மத சுதந்திரம் உண்டு** என்றும் இதை **எதிர்ப்பவர்களுக்கு சட்டப்பூர்வமாக எவ்வித தார்மீக உரிமையும் கிடையாது** என்றும் அதில் குறிப்பிட்டிருக்கிறார்.

இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் 296ம் விதி 107, 108 மற்றும் 111ன் படி **ஆலய வழிபாட்டில் குழப்பம் விளைவித்தல் மற்றும் இடையூறு செய்தால் ஒரு வருட சிறையும் அபராதமும். ஆராதனை கூடத்தை தாக்கி அழித்தால் இரண்டு வருட சிறையும் அபராதமும் விதிக்கப்படும்.** மேலும் பிரிவு 452 ன்படி ஆட்களுக்கு காயம் ஏற்படுத்தினால் 7 வருட சிறை மற்றும் அபராதமும் விதிக்கப்படும்.

சில இடங்களில் சட்டம் - ஒழுங்கு சீர்குலைவு நிகழும் எனக்கூறி அதனால் அனுமதி மறுக்கப்படுகிறது என்று கூறி கிறிஸ்தவர்கள் ஆராதனை நடத்த **அனுமதி மறுத்த** மாவட்ட **ஆட்சித்தலைவருக்கு** எதிராக மாண்புமிகு உயர்நீதிமன்ற நீதிக்கரசர் **ராஜசூர்யா** அவர்கள் 02-11-2017ல் இது **மக்களின் மத உரிமைகளைப் பறிக்கும் செயல்** எனவும் இதை **இந்துமதவாதிகள்** ஆட்சேபிக்க என்ன உரிமை இருக்கிறது? என்று கடுங்கண்டனம் தெரிவித்ததோடு ஆராதனை நடத்துவதற்கு ஆட்சித் தலைவரும், காவல் துறையும் பாதுகாப்பு கொடுக்க வேண்டும் எனவும் தீர்ப்பு வழங்கினார்.

**Supreme court declares the final judgement that No one can not right to Harmfull to the christian and cannot scoff the worship of christian God,**
**No one should not Attacking the christians.If any one break the Rules or Neglected the Rules of Indian Govt ( supreme court ) Rules and Regulations They could be Punishable and imprisoned for 10 years with non - Bailable**

THE COUNCIL BOARD OF RELIGIONS

*Christians will have their freedom in their deity.*
*According to the constitutional rights anyone who objects any religion will be prosecuted .*
*This Nation is a Democratic Country*
*INDIA is a Hindustan country but not a Hindu Nation . This Nation belongs to all kinds of People .*
*A person is free to choose any kind of worship*

RANJAN LAXMI PRASAD
Head Secretary of the council

எனவே **நற்செய்தி அறிவிப்பதற்கும் நற்செய்தி பிரதிகளை விநியோகிப்பதற்கும்** மதச்சார்பற்ற நம் தேசத்தில் கிறிஸ்தவர்களுக்கும் **பூரண உரிமை உண்டு.** இதனை **எதிர்ப்பவர்கள், இடையூறு செய்பவர்களை** ஆலயத்தைத் **தாக்குபவர்களைப்பற்றி** காவல்துறை **உதவவில்லையெனில்** நம் உரிமைகளை நிலைநாட்ட **நீதிமன்றத்தை நாடலாம்.**

**(சமயம் சாரா இந்திய சுதந்திர நாட்டில் அவரவர் தம் மத நம்பிக்கையை சுதந்திரமாக தெரிவு செய்யவும். மற்றவர்களுக்கு அதை தெரியப்படுத்தவும் உரிமையையும் உத்திரவாதமும் ஒவ்வொரு குடிமகனுக்கும் அளிக்கப்பட்டுள்ளது என்பதை அனைவரும் அறிந்திருப்பது நல்லது.).**

## முடிவுரை:

**அன்பான ஜாமக்காரன் வாசகர்களே,**

ஜாமக்காரன் தொடங்கி 50 வருடங்களில் இதுவரை ஆசிரியர் குறிப்பை (Editorial) இத்தனை நீளமாக எழுதியதில்லை. **இந்திய நிலைபாட்டில்** பெரும் மாற்றமும்,**பெரும் ஆபத்தும்** சூழ்ந்துக் கொண்டிருக்கிறது. குறிப்பாக **தமிழ்நாடு** படுமோசமாகிக்கொண்டேபோகிறது. இந்திய தேசம் எங்கும் போராட்டம். தேசத்தில் எங்கும் சமாதானம் இல்லை. ஆகவேதான் நாட்டின் நிலையைப்பற்றி ஜெபிப்பவர்களுக்காகவே இதை எழுதினேன். மற்றவர்களுக்கு இம்மாத பத்திரிக்கை பெரும் சலிப்பையும்,சோர்வையும் உண்டாக்கும். பொருத்துக்கொள்ளவும்.

**கத்தோலிக்க பிஷப்மார்,** நம் CSI **மாடரேட்டர்** யாவரும் **பிரதமர் மோடிக்கு** எச்சரிப்பு கடிதம் எழுதியுள்ளனர். இந்தியாவில்உள்ள அனைத்து கிறிஸ்தவ சபைகளும், **சபை தலைவர்களும், பாஸ்டர்களும், ஆயர்களும்** இணைந்து கூடி ஜெபிக்க அனைவருக்கும் அழைப்பு விடுத்துள்ளனர். இதில் பல சபைகளில் உபவாச ஜெபங்களை அரசியல் உண்ணவிரதம்போல் தொடர்ந்து நடத்துகின்றனர்.

**இந்த ஜெபங்களை எல்லாம் நம் கர்த்தர் கேட்பாரா?** என்ற ஒரு கேள்வியை எழுப்பி பாருங்கள். **நிச்சயம் கேட்கப்படமாட்டாது** என்று ஆவிக்குரியவர்கள் மட்டும் கூறுவார்கள்.

காரணம், நம் கிறிஸ்தவ **சபைகுள்ளேயே உள்குத்து சண்டைகள், பதவி சண்டைகள், ஜாதி சண்டைகள்** ஆகியவை பெரும்பாலான சபைகளில் தலைவிரித்தாடுகின்றன. **தலித்** கிறிஸ்தவர்கள் தனி போர்கொடி உயர்த்துகின்றனர். **நாடார்** கிறிஸ்தவர்கள் அதிலும் இரண்டுவித ஜாதி நாடார்கள் கொடியை பிடித்து போராடுகிறார்கள். ஒரு கூட்டம் **திருநெல்வேலி நாடார்** என்றும் மற்றொரு கிறிஸ்தவ கூட்டம் **கன்னியாகுமரி நாடார்** என்றும் இயேசுவை ஆராதிக்கும் **ஒரே சபைக்குள்** பிரிந்து செயல்படுகிறனர்.

■ 1966 ம் வருடம் நான் **பம்பாய்** சென்று கூட்டம் நடத்திய எல்லா(CNI,மெத்தடிஸ்ட்) சபைகளும் இன்று உடைந்து காணப்படுகின்றன. கன்னியாகுமரி நாடார்கள் தனியாக ஆலயம் கட்டி பிரிந்து ஆராதிக்கின்றனர். **திருநெல்வேலி நாடார்கள்** தனி ஆராதனை நடத்துகின்றனர்.

சில இடங்களில் காலை **முதல் ஆராதனை கன்னியாகுமரி நாடார்களுக்கு** தனி **திருவிருந்து ஆராதனையும்** காலை 9-00 மணி ஆராதனை **திருநெல்வேலி நாடார்களுக்காக** தனி திருவிருந்து ஆராதனையும் நடத்துகின்றனர். இரண்டு ஆராதனையிலும் நான் பிரசங்கிக்கும் இக்கட்டான நிலை எனக்கு ஏற்பட்டது. கிறிஸ்துவின் **ஐக்கிய பந்தியா இது?** உங்களுக்கே இது மிக வெட்கமாக தோன்றவில்லையா? என்று என் பிரசங்கத்திலேயே கேட்டேன்?

இப்படி **ஜாதி பிசாசுடன்** உறவுவைத்த, **ஜாதி வெறிகொண்ட** கிறிஸ்தவர்களின் ஜெபத்தை **கர்த்தர் எப்படி கேட்பார்?** எத்தனை **மிஷனரிகளை** இவர்கள் தாங்கினாலும், எத்தனை ஆலயங்களை இவர்கள் கட்டிகொடுத்தாலும், அந்த காணிக்கைகளை கர்த்தர் ஆசீர்வதிப்பார் என்றா நினைக்கிறீர்கள் ?

மத்திய கேராளாவிலும் **சுரியாணி கிறிஸ்தவர்கள்** என்றும் **தலித் கிறிஸ்தவர்கள்** என்றும், **ஈழவ கிறிஸ்தவர்கள்** என்றும் பிரிந்து ஒரே சபைக்குள் **ஒருவருக்கொருவர் ஒட்டாமல்** ஆராதிக்கிறார்கள். இயேசுவின் சரீரம் பிட்கப்பட்டதைப்போல இவர்களும் தங்களுக்குள் இரண்டாக,மூன்றாக **பிரிந்து செயல்படுகின்றனர்.**

**தெற்கு கேராளாவிலும், கர்னாடகாவிலும், ஆந்திராவிலும் ஜாதி** அடிப்படையில் டையோசிஸ் கல்லூரிகளிலும், மற்ற வேலை வாய்ப்புகளிலும் **கம்மம்,ரெட்டியார், நாயுடு** என்று பல ஜாதிகள் சபைக்குள் விளையாடுகின்றது.

**பூமியில் இரண்டு பேர் ஒருமனப்பட்டு ஒரு காரியத்தைக்குறித்து கேட்டால் பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால்** அது அவர்களுக்கு உண்டாகும் என்று உங்களுக்கு சொல்லுகிறேன்.மத் 18:19 என்று இயேசுகிறிஸ்து கூறினார். ஒருமனம்,ஒரே சிந்தை இருந்தால் மட்டுமே முழு இரவு ஜெபத்திலும், உபவாச ஜெபகூட்டத்திலும் செய்யப்படும் ஜெபத்தை கர்த்தர் கேட்பார் என்று அறியவேண்டும்.

சபைக்குள் உள்ள ஜாதி பிரச்சனைகளை நேரில் கண்டறியும்போது மனம் மிகவும் வேதனையில் துவண்டு போகிறது. **நமக்கே இப்படியானால் ஆண்டவரின் மனம் எப்படி துடித்திருக்கும்**!. இப்படிப்பட்டவர்கள் கூடி **தேசத்துக்காக ஜெபித்தால்** அந்த ஜெபம் கேட்கப்படுமா? இதற்கு பெயர்தான் மாயமாலம்.

முதலில் நம் கிறிஸ்தவர்கள் **மனம் திரும்பாமல்** நாம் யாவரும் **இயேசுவின் இரத்தத்தால்** கழுவப்பட்டவர்கள் என்ற **ஐக்கியம் நமக்குள் உண்டாகாமல்,** நம் பாரத தேசம் **மாறவே மாறாது. ஆளுகிறவர்களும் மனம்மாறமாட்டார்கள்.** கிறிஸ்தவர்களுக்குள் **ஒற்றுமை இல்லாததால்தான் காவி கட்சியினர்** கிறிஸ்தவர்களை,கிறிஸ்தவசபைகளை இன்னும் அதிகமாக **துன்புறுத்துகிறார்கள். பிஷப்மார், மாடரேட்டர்கள்,** பிரதமருக்கு எத்தனை எதிர்ப்பு கடிதங்கள் எழுதினாலும் அவைகள் குப்பைதொட்டிக்குள் தான் போடப்படும்.

இந்தியாவின் **உபத்திரவ காலம் இன்னும் அதிகமாக பெருகவேண்டும்,** அப்போது தான் **நம் கிறிஸ்தவர்களுக்கு** புத்தி வரும். அப்போதுதான் இவர்கள் **ஒன்றுபடுவார்கள்.**

அப்போதுதான் **உண்மை கிறிஸ்தவர்கள்** யார்? **பெயர் கிறிஸ்தவர்கள் யார்** என்று அறிய முடியும். இலங்கையில் யாழ்பாணம்(Jaffna) **தமிழர்கள் பிரச்சனை** வந்து(கரச்சல்வந்து) மக்கள் சிதறிக்கப்பட்டதினால் தான் உலகெங்கும் உள்ள நாடுகளில் அகதிகளாய் குடியேறின இவர்களில் லட்சக்கணக்கான **சைவ இந்து தமிழர்கள்** கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு ஆங்காங்கே கூட்டம் கூட்டமாய் கிறிஸ்துவை ஆராதித்துக் கொண்டிருக்கிறார் கள். இப்படிப்பட்ட நெருக்கங்களில்தான் தன்னை நேசிக்கும் இயேசுவை தேடும் ஆசை ஏற்படும். **RSS,இந்து முன்னனி** தீவிரவாதிகள் இந்தியாவில் உள்ள குட்டிகுட்டி சபைகளைத்தான் தாக்கிக்கொண்டிருக்கின்றனர். **CSI,லூத்தரன்,மெத்தடிஸ்ட்** மெயின்லைன் போன்ற சபைகளை இன்னும் அவர்கள் தொடவில்லை. அப்படி தாக்க ஆரம்பித்தால் அப்போதுதான் தாக்குதலின் பயங்கரம் எப்படி என்று விளங்கும். அப்போதுதான் ஒருமனப்பட்டு **ஜாதி-சபை வித்தியாசம் பாராமல்** அழுதுஜெபிப்பார்கள். அந்த நாள் வெகுதுாரத்தில் இல்லை என்பதை அனைத்து கிறிஸ்தவ சபைகளும் உணரவேண்டும்.

என் ஜாமக்காரனில் நான் இப்படி வெளிப்படையாக எழுதுவதால் **பிஷப்மார்களிடமிருந்தும் மாடரேட்டமிருந்தும் சில ஆயர்களிடமிருந்தும்**, சகோ. **தினகரனின் விசிறிகள், நாலுமாவடி விசிறிகள்,** சாது செல்வராஜ் **ஏஞ்சல் டி.வி.,** ஆசீர்வாதம் டி.வி. ஆகியவர்களின் **பங்காளர்கள்** இவர்களுக்கு உதவி செய்பவர்கள் ஆகிய பலர் மூலமாக தினசரி எனக்கு **எச்சரிக்கை கடிதங்களும், கொலை மிரட்டல்களும் வந்தவண்ணம் இருக்கின்றன.** வாய் கழுவும அளவிற்கு **கெட்டவார்த்தைகாளால்** தொலைபேசியில் என்னை ஏசுவதும், மொட்டைக் கடிதத்தில் **ஆபாச வார்த்தைகளால்** அர்ச்சனைகளும் குவிகிறது. இத்தனையும் பல வருடங்களாகவே எனக்கு எதிராக எழும்பி வந்துகொண்டேயிருக்கிறது. அவைகள் எதையும் வெளியே அறிவிக்காமல் பிரசங்கத்திலும் கூறாமல் வெற்றிகரமாக ஊழியத்தை செய்துகொண்டு வருகிறேன்.

■ **சில வருடங்களுக்குமுன்** டையோசிஸ் கன்வென்ஷனில் நான்பிரசங்கிக்கும்போது, நான் பிரசங்கம் செய்யும் மேடையில் **மைக்** அருகே **வலது பக்கம் இடது** பக்கமாக இரண்டு பக்கமும் இரண்டு நபர்கள் **எனக்கு பாதுகாப்புக்காக** நிறுத்தப்பட்டார்கள்.

மைதானத்தில் மக்கள் என் பிரசங்கத்தை கவனத்துடன் கவனித்துக்கொண்டிருக்கும்போது **நான்குபேர்** வெவ்வேறு இடங்களில் நின்றுக்கொண்டு சபாரி உடையணிந்தவர்களாய் மக்களை கவனித்தவன்னம் நின்று கொண்டிருக்கிறார்கள். என்னை தங்க வைத்த பங்காளாவில் இரண்டு காவலாளிகள் புகைபிடித்த வண்ணம் நான் தங்கியிருக்கும் வீட்டை **காவல் காப்பதை** ஜன்னல் வழியாக கண்டேன். டையோசிஸ் கன்வென்ஷன் கன்வீனராக இருந்த இரண்டு ஆயர்களிடம் இதைக்குறித்து கேட்டேன்.

**ஐயா, என் ஊழிய அனுபவத்தில்** இப்படிப்பட்ட காட்சியை நான் பிரசங்கித்த கூட்டங்களில் எங்கும் நான் பார்க்கவில்லையே என்றேன். அதற்கு அவர்கள் ஐயா, உங்களுக்கு எதிராக பிஷப் அவர்களுக்கு **கொலை மிரட்டல். இரத்த கையெழுத்து இட்ட** கடிதங்கள் வந்துள்ளது. அதில் **டாக்டர்.புஷ்பராஜ்** அவர்கள் கூட்டம் முடிந்து **உயிரோடு போகவிடமாட்டோம்** என்று அதில் எழுதியிருந்ததால் **டையோசிஸ் நீர்வாக கமிட்டி சென்னையிலிருந்து** பல லட்சம் ரூபாய்கள்

கொடுத்து **பிளாக் கேட்** என்ற பெயரில் **அடியாட்களை** வரவழைத்துள்ளார்கள், ஊர்போய் சேரும்வரை **நான்கு நாட்களும்** உங்களை பாதுகாக்க நியமிக்கப்பட்டவர்கள் தான் அந்த **6 நபர்களும்** என்று கூறினார்.

**கர்த்தர் நகரத்தை காவாராகில் காவல் காக்கிறவன் பிரயாசம் விருதா** என்ற வசனத்தை அவரிடம் கூறி முன்னாள் **பிரதமர் இந்திரா காந்தியை** காப்பாற்ற நியமித்த **மெய் காப்பாளர்கள்தான் இந்திரா காந்தியை சுட்டுக்கொன்றார்கள்.** ஆகவே இப்படிப்பட்ட பாதுகாப்பை நாளை நான் பார்த்தால் மேடை ஏறமாட்டேன் என்றேன்.

என் **கர்த்தர் அனுமதிக்காமல்** எனக்கு எதுவும் நடக்காது. **அப்படியே நடந்தாலும் நான்** அதை எதிர்கொள்ளவும் **அடிப்படவும்,மரிக்கவும்** தயார்படுத்திக்கொண்டுதான் இந்த **ஜாமக்காரன் ஊழியத்தை** தொடர்ந்து செய்துகொண்டிருக்கிறேன். அதன் பிறகு பிஷப் **அந்த அடியாட்களை** தனியாக நிறுத்தாமல் கூட்டத்தோடு கூட்டமாக அவர்களை அமர வைத்துவிட்டார். அவர்களும் என் பிரசங்கத்தை கேட்டார்கள்.

**சேலம் கமிஷனரும்** என்னை அழைத்து **என்னை தாக்க சிலர்** ஏற்பாடுகளை செய்து கொண்டிருப்பதாக எனக்கு **தகவல்கள்** வந்துக்கொண்டிருக்கிறது. உங்களுக்கு பாதுகாப்பு தேவையா? என்று விசாரித்தார். **பாதுகாப்பு தேவை இல்லை** என்று எழுதிகொடுத்தேன். கமிஷனர் மேலும் என்னிடம் பேசும்போது கூறினார், என் தனிப்பட்ட முறையில் உங்களிடம் வேண்டுகிறேன், குறைந்த பட்சம் உங்கள் **ஜாமக்காரன்** பத்திரிகையில் ஒரு வருடத்திற்கான உங்கள் ஊழிய விவரங்களை(Programme) தேதி மாதம் குறிப்பிட்டு **12 மாதத்துக்கும்** மொத்தமாக வெளியிடுவீர்களே, அதையாவது பத்திரிகையில் வெளியிடுவதை எனக்காக சில காலம் **நிறுத்திவைக்கமுடியுமா?** என்று கேட்டார். அவரின் கரிசனையான வேண்டுகோள் நிமித்தமாக என் ஊழிய **பயண குறிப்புகளை** ஊழியம் நடக்கும் ஊர் நான் புறப்படும் தேதிகளை குறிப்பிட்டு பத்திரிகையில் வெளியிடுவதை கடந்த 6 வருடங்களாக நிறுத்தி வைத்துள்ளேன்.

பல **பத்திரிகைகள், வானொலி நிலையத்தினர். டி.வி. நிலையத்தினர்** இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் என்னை **நேரடி பேட்டி** கண்டபோது எல்லாரும்கேட்ட ஒரே கேள்வி உங்களைப்பற்றி ஆபாசமாக ஏசி திட்டிவரும் **கடிதங்களை நீங்கள் வாசிப்பீர்களா?**, அதற்கு உங்கள் நடவடிக்கை என்ன என்றார்கள்.

■ **எசேக்கியா இராஜாவுக்கு** விரோதமாக சத்துருக்கள் நாட்டை முற்றுகையிட்டு எதிரி நாட்டு ராஜா எசேக்கியா ராஜாவை **ஆபாசமாக ஏசி தெய்வத்தை** குறித்தும் ஏசி கடிதம் எழுதி இராஜாவிடம் சேர்ப்பித்தான். அப்போது **எசேக்கியா இராஜா** அந்த கடிதத்தை அப்படியே பிரித்து விரித்து ஆண்டவர் சன்னதியில் வைத்து ஜெபித்தார். இராஜா ஜெபிக்க தொடங்கியபோதே அதிகாரிகள் ஒருவருக்கொருவர் அடையாளம் தெரியாமல் ஒருவருக்கொருவர் **வெட்டிக்கொண்டு செத்தார்கள்.** எசேக்கியாவுக்காக அந்த யுத்தத்தை கர்த்தர் செய்தார்.

ஆனால் நான் அப்படி செய்யமாட்டேன். அப்படி என்னைப்பற்றி ஆபாசமாக ஏசிவரும் கடிதங்களை பிஷப்மார், சில ஊழியர்கள் அனுப்பும் **வக்கீல் நோட்டீசை** முழுவதுமாக வாசித்து

**மொட்டை கடிதங்களை** மட்டும் வாசித்து கிழித்துவிடுவேன். வக்கீல் நோட்டீஸ் அனுப்பிய ஸ்டார் ஊழியர்களுக்கும், பிஷப்மார்களுக்கும் நானே பதில் எழுதுவேன். கர்த்தரிடம் **எசேக்கியா இராஜா** கடிதத்தை சமர்பித்து ஜெபித்ததுபோல நான் ஜெபிக்கமாட்டேன். காரணம் அன்று **எசேக்கியா** காலத்தில் **கர்த்தர் பரமண்டலங்களில்** இருக்கிறவராக அறியப்பட்டார்.

ஆனால், இன்று **இயேசுகிறிஸ்துவின் கிருபையால்** கர்த்தர் **இம்மானுவேலுவாக** என் உள்ளே வாசம் செய்வதாலும் என்னோடு இருப்பதாலும் நான் ஜெபிப்பதில்லை. **நான் எதை காண்கிறேனோ,** அதை கர்த்தரும் **காண்கிறார். நான் எதை வாசிக்கிறேனோ** அதை கர்த்தரும் **வாசிக்கிறார்.** அப்படியிருக்க நான் ஏன் ஜெபிக்கவேண்டும். என்னை அழைத்தவர் அவர், என்னை **எழுத வைத்தவர்** அவர். அவர் **என்னை அறிவார்.** நான் எந்த சலனமும் இல்லாமல் எப்போதும்போல **போகிறேன்,வருகிறேன்,எழுதுகிறேன்,பிரசங்கிக்கிறேன்.** அவ்வளவே!. இதுதான் என் கடுகளவுள்ள விசுவாசம் ஆகும்.

பல சமயம் என் ஜாமக்காரனில் எழுதும் எழுத்துக்களால் **என் பிள்ளைகளும்** என் உறவினர்களும் **மற்றவர்களுக்கு** முன் அவமானப்படுத்தப்பட்டதாக கேள்விப்பட்டேன். அதன் மூலம் என் பிள்ளைகளின் கவுரவத்திற்கு இழுக்கும் உண்டானது எனலாம். அதைப்பற்றியெல்லாம் **நான் பொருட்படுத்துவதில்லை.** என் **பிள்ளைகளோ,** என் **உறவினர்களோ இரட்சிக்கப்பட்டவர்களாக** இருந்தால் அதை **அவமானமாக கருதமாட்டார்கள்.** அதை **பெருமையாகத்தான்** கருதுவார்கள். இதுதான் என் நிலையும் என் குடும்பத்தின் நிலையும் ஆகும்.

■ தண்ணீருக்காக மக்கள் பல ஊர்களில்(தமிழ்நாட்டில்) காலிகுடங்களோடு அலையும் நிலைகளை அறிந்து என் மனைவி மழைக்கு வேண்டி விசேஷ ஜெபகுறிப்பாக நம் ஜாமக்காரன் **வாசகர்களை ஜெபிக்க கேட்டுக்கொள்ளுங்கள்** என்று மீண்டும் ஞாபகப்படுத்தினார். **மழைக்காக** ஒவ்வொரு நாளும் நாம் ஜெபிக்கவேண்டும் என்று வாசகர்களுக்கு வேண்டுகிறேன். ஆம். அநேக இடங்களில் மக்கள் தண்ணீருக்காக படும்பாடுகள் மிக பரிதாபம். கர்நாடகாவில் நமக்கு தண்ணீர் கொடுக்கவில்லை என்று நமக்கு ஒரு குறை உண்டு. உலக ஆராய்ச்சியாளர்கள் கூறுவதுபோல **தண்ணீர் பிரச்சனை** உலகமெங்கும் உண்டாகபோகிறது. ஆப்பிரிக்கா போன்ற நாடுகளிலும் தண்ணீர் பஞ்சம். பல இடங்களில் **தண்ணீருக்காகவே யுத்தம் மூளும் நிலை** உள்ளது என்று எழுதியுள்ளார்கள். ஆகவே விசுவாசிகள் தண்ணீருக்காக தினசரி ஜெபங்களில் ஜெபிக்க கேட்டுக்கொள்கிறேன்.

■ அடுத்ததாக **தேசத்தின் தலைவருக்காகவும், தேசத்தின் சமாதானத்திற்காகவும் நாம்** தினமும் மறவாமல் பாரத்துடன் ஜெபிக்கவும். உண்மையான பாரமான ஜெபம்மூலம் நிச்சயம் கர்த்தரின் கண்களில் இரக்கம் கிடைக்கும்.

**கர்த்தர் நம் தேசத்தின் மீது இறங்குவாராக. ஜெபிப்போம். ஜெயம் பெறுவோம்.**

கர்த்தரின் பணியில்

**டாக்டர்.புஷ்பராஜ்**



# பாடுகள் ஏன்?

**டாக்டர்.தியோடர் வில்லியம்ஸ்**

**இந்த உலகத்தில் எல்லா மனிதருக்கும் பாடுகளும் துன்பங்களும் உண்டு. பாடுகளும், துன்பங்களும் ஏன் ஏற்படுகிறது? பாடுகளும், துன்பங்களும் ஏற்படுவதற்கு பல காரணங்கள் உண்டு. தனிமனிதனுக்கு ஏன் பாடுகள் ஏற்படுகின்றன அல்லது அவனுக்கு ஏன் நோய் வருகின்றது என்று நாம் வியாக்கியானப்படுத்த துணியக்கூடாது. அப்படிப்பட்ட காரணத்தை திருமறை நமக்கு தரவில்லை. ஏன் என்கிற கேள்விக்கு தனி மனித சமுதாயத்திலே பதில் கிடைக்கின்றன. இன்னொரு காரியத்தையும் கவனிக்கப்போகிறோம். ஏற்கனவே நாம் பார்த்தது என்ன? நாம் சபிக்கப்பட்ட நியாயம் தீர்க்கப்பட்ட உலகத்திலே வாழ்கின்றோம். ஆகையினாலே எல்லா மனிதருக்கும்உள்ள பாடுகளின் அனுபவங்களிலே நமக்கும் பங்கு உண்டு. நம்மை பொதிந்து பக்குவமாக,பாதுகாப்பாக கடவுள் வைத்துவிடமாட்டார். ஏனென்றால் அது அவருடைய நீதியான, நியமங்களுக்கும், நியதிகளுக்கும் விரோதமான செயலாகும். ஆகையினால் இந்த உலகத்தின் நீதியின் அடிப்படையிலே நியாயத்தின் அடிப்படையிலே ஆண்டவரும் அவர் நம்முடைய சொந்த மக்களும், மற்ற மக்களின் அனுபவங்களிலே பங்கு பெறுவதற்கு அனுமதி கொடுக்கிறார். சில சமயங்களிலே அற்புதமான விதத்திலே நம்மை பாதுகாக்ககூடும். ஆனால் எப்பொழுதும் அவர் நம்மை அவ்விதமாக பாதுகாக்கக்கூடுமானால் அவருடைய நியாயமான ஆளுகைக்கு பாதகம் ஏற்படும். ஆகையினாலே எல்லா மனிதருக்கும் ஏற்படும் பாதகமான அனுபங்களிலே நமக்கும் பங்கு உண்டு.**

**இரண்டாவதாக மனிதனின் பாவங்களினாலே பாடு, நோய் ஏற்படலாம். தனிப்பட்ட மனிதன் செய்கிற அக்கிரமத்தினாலே அவனுடைய கோணலான வழிகளில் அவன் அப்பேர்பட்ட விளைவுகளை தன்மேல் வருவித்துக்கொள்ளுகிறான். சாத்தானலும் நோய்களும், துன்பங்களும் ஏற்படலாம் என்று அறிவோம். இப்போழுது நான்காவது காரணமாக, கடவுளின் சித்தத்தையும், அவருடைய சத்தியத்தையும், எதிர்க்கும் மனிதர்கள் இந்த உலகத்தில் உண்டு. அவர்கள் மூலமாக அவருடைய பிள்ளைகளுக்கு பாடுகள் ஏற்படலாம். சங்கீதங்களிலே அடிக்கடி சங்கீதக்காரன் தன்னுடைய எதிரிகளைப்பற்றியும் துன்மார்க்கரைப் பற்றியும் எழுதுவதைப் பார்க்கிறோம். சில சங்கீதங்களிலே தன்னுடைய எதிரிகள் அழிக்கப்படவேண்டும். துன்மார்க்கர்கள் நிர்மூலமாக்கப்பட வேண்டும் என்று சங்கீதக்காரன் விரும்பு வதையும் ஜெபிப்பதையும் நாம் பார்க்கிறோம். ஆனால் நாம் அப்படி ஜெபிக்கக்கூடாது.**

**இது ஒருவேளை நமக்கு பல கேள்விகள் எழுப்பலாம். இப்படி ஜெபிப்பது சரியா? நம்முடைய எதிரிகள் அழியவேண்டும் என்று விரும்புவது சரியா? என்றெல்லாம் நாம் எண்ணலாம். ஆனால் ஒன்றை நாம் கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். சங்கீதக்காரன் தன்னுடைய எதிரிகள் என்று குறிப்பிடுவது அவர்கள் கடவுளுடைய எதிரிகள் என்று கூறுகிறார். சங்கீதக்காரனை அவர்கள் எதிர்ப்பதற்கு காரணம் என்ன?சங்கீதக்காரன் கடவுளுடைய ஊழியனாகவும் அவருடைய உண்மையான தாசனாகவும்,பிரியமாகவும் இருக்கிறபடியினாலே அவரை எதிர்க்கிறார்கள். கடவுளுடைய சித்தங்களுக்கும், திட்டங்களுக்கும் எதிர்த்து நிற்கிறார்கள். ஆகையினாலே அவருடைய நியாயத்தீர்ப்பு அவர்கள் மேல்வரவேண்டுமென்று சங்கீதக்காரன் விரும்புகிறான் என்பதில் எந்தவித சந்தேகமில்லை.அதுமட்டுமல்ல,சங்கீதக்காரன் அவர்களை துன்மார்க்கர் என்று அழைக்கிறார்.**

காரணமென்ன? கடவுளுக்கு எதிராக இருக்கிறவர்கள் கடவுளுடைய ஊழியக்காரனை எதிர்க்கிறவர்கள். ஆகையினாலே அவர்களை **துன்மார்க்கர்** என்று சங்கீதக்காரன் கூறுகிறார். தனக்கு அவர்கள் துன்பம் விளைவிக்கிறார்கள் அல்லது தன்னுடைய மனதை புண்படுத்துகிறார்கள் என்பதினாலே மட்டுமல்ல கடவுளின் பெரும்திட்டங்களுக்கும் அவருடைய ஆளுகைக்கும், ஊழியத்திற்கும் அவர்கள் **எதிர்த்து நிற்கிறார்கள்** என்பதினாலே அவர்களை துன்மார்க்கர் என்று சங்கீதக்காரன் கூறுகிறார். 35ம் சங்கீதத்தை எடுத்துப்பார்ப்போம்.

நான்காவது வசனம் என் பிராணனை வாங்கத் தேடுகிறவர்கள் வெட்கப்பட்டு கலங்கு வார்கள். எனக்கு தீங்கு செய்ய நினைக்கிறவர்கள் நாணமடைவார்களாக என்று எழுதுகிறான். 19ம் வசனம் வீணாய் எனக்கு சத்துருவானவர்கள் என்னிமித்தம் சந்தோஷியாமலும், முகாந்தர மில்லாமல் என்னை பகைக்கிறவர்கள் கண் சிமிட்டாமலும் இருப்பார்களாக என்று எழுதுகிறார். அதற்கு காரணமென்ன? முகாந்திரமில்லாமல் சங்கீதக்காரனை பகைக்கிறதற்கு காரணமென்ன? வீணாய் சங்கீதக்காரனுக்கு அவர்கள் சத்துருக்களாக காரணமென்ன தாவீது கடவுளை நெருங்கி வாழ்ந்தப்படியினாலே கடவுளை பிரியப்படுத்தினதினாலே அவருடைய சித்தத்தை இந்த உலகத்திலே செய்தபடியினாலே அவர்கள் **சங்கீதக்காரனை வெறுத்தார்கள்.** என் அருமையான சகோதரனே! சகோதரியே! இவ்விதமான அனுபவம் நம்முடைய வாழ்க்கையிலே உண்டல்லவா. நம்மை சிலர் **முகாந்திரமில்லாமல்** பகைப்பதைக் காணலாம். ஏனென்றால் நாம் கடவுளால் ஆசீரவதிக்கப்பட்டு அவரால் பயன்படுத்தப்படுகிறோம் என்பதை காணும்போது அவர்கள் எரிச்சலடைகிறார்கள். கடவுளின் சித்தத்தை செய்கிறவர்களை அவர்கள் எதிர்ப்பார்கள் என்பதில் நாம் எந்த விதத்திலும் சந்தேகப்பட வேண்டிய அவசியமில்லை. அதைக்குறித்து ஆச்சரியப்படவேண்டிய அவசியமில்லை. இப்படி கடவுளுக்கு நாம் ஊழியம் செய்யும்போது நிச்சயமாய் நம்மை எதிர்க்கிறவர்கள் இருக்கத்தான் செய்வார்கள். ஏன் தெரியுமா? இந்த உலகத்திலே அநீதியும்உண்டு,நீதியும்உண்டு,நியாயமும் உண்டு. அநியாயம்உண்டு, துன்மார்க்கமும்உண்டு,ஆண்டவருக்கு பிரியமாக வாழ்கிறவர்களும்உண்டு. இப்படிப்பட்ட நிலையிலே நாம் ஆண்டவருக்காக நிற்கும்போது அவரை கனம் பண்ணமுயலும்போது நம்மை மற்றவர்கள் எதிர்ப்பதிலே ஆச்சரியமில்லை. 38ம் சங்கீதத்தை எடுத்துப் பார்ப்போம். அங்கே சங்கீதக்காரன் என்ன கூறுகிறார். 19ம்வசனம் **என் சத்துருக்கள் வாழ்ந்து பலத்திருக்கிறார்கள்.** முகாந்திரமில்லாமல் என்னை பகைக்கிறவர்கள் பெருகியிருக்கிறார்கள். இந்த சங்கீதத்தை எழுதிய தாவீதுஎன்று அந்த சங்கீதத்தின் தலைப்பிலிருந்து அறிந்து கொள்கிறோம். தாவீதை அநேகர் பகைத்தார்கள். சவுலும்,சவுலை சார்ந்தவர்களும் பகைத்தார்கள். இப்படி கடவுளுடைய தெரிந்தெடுப்பும்,அழைப்பும் அபிஷேகமும் நம்மேல் இருக்கும் போது நம்மை பகைக்கிறவர்கள் இந்த உலகத்தில் இருப்பார்கள். அவர்கள் சாத்தானால் ஏவப்பட்டு அவனுடைய கையாட்களாய் ஒருவேளை நம்மை பகைக்கலாம். 38வது சங் 20ம் வசனம் நான் நன்மையை பின்பற்றுகிறபடியால் நன்மைக்கு தீமைசெய்கிறவர்கள் என்னை விரோதிக்கிறார்கள். இங்கே நிச்சயமாய் சங்கீதக்காரன் அவர்கள் இவனை வெறுப்பதின் காரணத்தையும் கூறுகிறான். நன்மையை பின்பற்று கிறபடியினாலே நன்மைக்கு விரோதமாய் இருக்கிறவர்கள் அவரை பகைக்கிறார்கள். இது எவ்வளவு உண்மையான ஒரு காரியமில்லையா?நாம் நன்மைக்கு நிற்கும்போது கடவுளுக்காக நிற்கும்போது கடவுளை வெறுக்கிற வர்கள் நன்மையை வெறுக்கிறார்கள். நிச்சயமாய் அவர்கள் நம்மை பகைத்தான் செய்வார்கள். இப்படிப்பட்டநிலை ஏற்படும்போது நாம் சோர்ந்துவிடக்கூடாது அல்லது ஆச்சரியப்பட்டு தயங்கி விடக்கூடாது. 69ம் சங் 7வது வசனம் **உமது நிமித்தம் நிந்தையை சகித்தேன். இலச்சை என் முகத்தை மூடிற்று** என்று சங்கீதக்காரன் எழுதுகிறான். 4வது வசனம் **நிமித்தமில்லாமல் என்னைப் பகைக்கிறவர்கள் என் தலைமயிரிலும் அதிகமாயிருக்கிறார்கள்** வீணாக எனக்கு சத்துருக்களாகி என்னை சங்கரிக்க வேண்டுமென்றிருக்கிறவர்கள் பலத்திருக்கிறார்கள். நான் எடுத்துக் கொள்ளாததை நான் கொடுக்க

வேண்டியுள்ளது என்று சங்கீதக்காரன் அங்கே கூறுகிறான். இப்படியாக காரணமில்லாமல் பகைக்கிறவர்கள் கடவுள் நிமித்தம் அவனை பகைக்கிறவர்கள் உண்டு. என் அருமையான சகோதரனே! நம்முடைய வாழ்க்கையிலே இப்படிப்பட்ட நிலையை நாம் காணலாம்.

கிறிஸ்துவுக்காக முழு நேரமாக ஊழியம் செய்வதற்காக ஒப்புக்கொடுத்து ஊழியத்தின் ஆரம்பத்திலிருந்த ஒரு வாலிப சகோதரன் சொன்னார். ஐயா, இந்த ஊழியத்தில் இவ்வளவு பாடுகள் உபத்திரவங்கள் இருக்குமென்று நான் எண்ணவில்லை. கடவுளுக்கு ஊழியம் செய்தால் அவர் நம்மை ஆசீர்வதிப்பார். பாதுகாத்துக்கொள்வார். நம்மை நல்ல இலகுவான வழிகளில் நடத்துவார் என்று எண்ணிக்கொண்டிருந்தேன். ஆனால் இங்கே பார்த்தால் இப்பொழுது எதிர்ப்பும், மனதுக்கமும் ஏற்படுகிறது என்று சொன்னார். ஆம். கர்த்தருடைய ஊழியத்திலே **பாடு அனுபவிப்பதே** நமக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்று திருமறைபோதிக்கிறது. இதை பவுலின் வாழ்க்கையில் பார்க்கிறோம். ஊழியக்காரர்களிலே தலை சிறந்த ஊழியராக பவுல் விளங்கினார். ஆனால் அவரே **பாடு அனுபவிக்க வேண்டுமென்பதை** புரிந்துக்கொண்டார். அவருடைய வாழ்க்கையின் ஆரம்பத்திலேயே ஆவிக்குரிய வாழ்க்கையின் ஆரம்பத்திலேயே ஊழியத்தின் ஆரம்பத்திலேயே அதைக்கண்டுக் கொண்டார். ஏன் அவரை முதன்முதல் தன் ஊழியத்துக்கு அழைக்கும்போது அவருக்கு கொடுக்கப்பட்ட வார்த்தைகளிலே இது சொல்லப்பட்டிருக்கிறது. அப் 9:15ம் வசனம் அனனியாவின் மூலமாய் தேவனுடைய வார்த்தை பவுலுக்கும் வந்தது. அனனியாவிடம் என்ன கர்த்தர் கூறுவதை கவனியுங்கள். அதற்கு கர்த்தர் நீ போ அவன் புறஜாதிகளுக்கும்,அவன் இராஜாக்களுக்கும்,இஸ்ரவேல் புத்திரருக்கும் என்னுடைய நாமத்தை அறிக்கையிடுகிறதற்காக நான் தெரிந்துகொண்ட பாத்திரமாய் இருக்கிறான். **அவன் என்னுடைய நாமத்தினிமித்தம் எவ்வளவாய் பாடுபடவேண்டும்** என்பதை நான் அவனுக்கு காண்பிப்பேன் என்றார். கர்த்தர் அனனியாவுக்கு கூறிய வார்த்தைகள் இவை. பவுல் கர்த்தருடைய நாமத்தினிமித்தம் **எவ்வளவாய் பாடுபடவேண்டும்** என்று அவருக்கு விளக்கிக் காட்டினார்.

ஆகையினாலே, ஆரம்பத்திலிருந்தே கிறிஸ்தவ வாழ்க்கையிலும், ஊழியத்திலும் பாடுகள் உண்டு என்பதை பவுல் உணர்ந்துகொண்டார். இது அவருடைய பொறுமையிலும்,எழுத்துகளிலும் காண்கிறோம்.அப் 14ம் அதிகாரம் பவுல் புது விசுவாசிகளுக்கு கூறின ஒரு சத்தியத்தை காண்கிறோம். 22ம் வசனம் சீஷருடைய மனதை திடப்படுத்தி விசுவாசத்திலே நிலைத்திருக்கும்படி அவர்களுக்கு புத்தி சொல்லி நாம் **அநேக உபத்திரவங்களின் வழியாய்** தேவனுடைய இராஜ்ஜியத்தில் பிரவேசிக்க வேண்டுமென்று சொன்னார். பவுலும்,பர்னபாவும் புது விசுவாசிகளுக்கு கொடுத்த போதனை அது. அநேக உபத்திரவங்களின் வழியாய் தேவனுடைய இராஜ்ஜியத்தில் பிரவேசிக்க வேண்டும். என் அருமையான சகோதரனே,சகோதரியே வாழ்க்கையில் அற்புதங்களும், அடையாளங்களும் தான் உண்டு. நமக்கு நல்ல செழிப்பும், வளமும், வசதியும்தான் உண்டு என்று கொடுக்கப்படுகின்ற போதனை சரியான போதனைஅல்ல. நிச்சயமாய் ஆண்டவர் நம்மை காத்துக்கொள்வார். ஆசீர்வதிப்பார். நமக்கு செழிப்பும், வளமையும் அவரால் தரக்கூடும். ஆனால் அதே சமயத்திலே **விசுவாச வாழ்க்கையிலே உபத்திரவங்கள் உண்டு** என்பதை வேதாகமம் தெளிவாய் எடுத்துக்காட்டுகின்றது. யார் இடுக்கமான பாதை வழியாய் தேவனுடைய இராஜ்ஜியத்தில் பிரவேசிக்க துணிந்து முன் செல்லுகிறார்களோ அவர்களுக்கு நிச்சயமாக எதிர்ப்புகள் உண்டு. துன்பங்கள் உண்டு. **யார் தேவனுக்கு உண்மையாக ஊழியம்செய்கிறார்களோ,அவர்களுக்கும் எதிர்ப்புகள், துன்பங்களும் உண்டு.** இதை நாம் திருமறையில் காண்கிறோம். பவுலின் அனுபவத்திலே இதை நாம் விசேஷமாய் காண்கிறோம். பவுல் கொரிந்தியருக்கு எழுதின இரண்டாம் நிருபத்தை எடுத்துப் பார்ப்போம். முதல் அதிகாரம் 8ம் வசனம் ஆகையால் சகோதரரே **ஆசியாவில் எங்களுக்கு நேரிட்ட உபத்திரவத்தை நீங்கள் அறியாதிருக்க எங்களுக்கு மனதில்லை. என்னவெனில் பெயர்போன இந்த நம்பிக்கை அற்றுப்போகபண்ணதக்கதாக எங்கள் பலத்திற்கு மிஞ்சின அதிக பாரமான**

**வருத்தம் எங்களுக்கு உண்டாயிற்று** என்று எழுதுகிறான். **பலத்துக்கு மிஞ்சின அதிக பாரமான வருத்தம்** என்று கூறிவிட்டுஅதுமட்டுமல்ல, ஆசியாவிலே நாங்கள் பிழைத்திருப்போமா என்னவோ என்ற நம்பிக்கை இழக்கத்தக்கதாக இந்த **உபத்திரவம்** எனக்கு ஏற்பட்டது என்கிறார். இந்த அனுபவம் பவுல் இவ்விதமாய் குறிப்பிடுகின்றார். அப் 19ம் அதிகாரத்தில் பார்க்கிறோம் எபேசு பட்டணத்திலே அவர் ஊழியத்தின் சிறப்பும் செம்மையுமாக நடத்திக்கொண்டிருந்தார். அநேகர் விசுவாசிகள் ஆனார்கள். சாத்தான் அங்கே எதிர்ப்பை கிளப்பிவிட்டான். அப் 19:24 தெமேத்திரியு என்னும் பேர்கொண்ட ஒரு தட்டான் தியானாளின் கோயிலைப்போல வெள்ளியினால் சிறிய கோவில்களை செய்து தொழிலாளிக்கு மிகுந்த ஆதாயம் வருவித்துக்கொண்டிருந்தான். இவ்வளவையும்,அவன் தன்னைபோல் தொழில் செய்கின்ற மற்ற வேலைஆட்களையும் அவன் கூடிவரச் செய்து மனுஷர்களே இந்த தொழிலால் நமக்கு நல்ல பிழைப்பு உண்டாயிருக்குமென்று அறிவீர்கள். இப்படியிருக்க **கையினால் செய்யப்பட்ட** தேவர்கள்,தேவர்கள் அல்லவென்று இந்த பவுல் அப்போஸ்தலன் சொல்லி எபேசுவில் மாத்திரமல்ல,கொஞ்சம்குறைய ஆசியா எங்கும் அநேகம் பேருக்கு போதித்து அவர்களை வசப்படுத்திக்கொண்டான் என்று நீங்கள் கண்டும் கேட்டுமிருக்கிறீர்கள். இவ்விதமாய்கூறி அவன் மக்களை பவுலுக்கு விரோதமாக தூண்டிவிட்டான். அங்கே பெரிய கலகம் ஏற்பட்டது. **பவுலின் உயிருக்கு ஆபத்து** ஏற்பட்டது. இதைத்தான் பவுல் 2கொரி 1:8ல் குறிப்பிடுகிறார். ஆம்,தேவனுடைய சத்தியத்தை போதிக்கும்போது அந்த சத்தியத்தினாலே மக்கள் மனம்திரும்புவதால் தங்கள் தொழில் கெட்டுபோகிறது என்று தங்கள் தாறுமாறான வழிகள் போலியான மார்க்கங்கள் பாதிக்கப்படுகின்றன என்றும் எண்ணுகிறவர்கள் தான் எதிர்ப்பை நமக்கு விரோதமாக உண்டு பண்ணக்கூடும்.

இவ்விதமாக **ஊழியத்திலே எதிர்ப்பு உண்டு** என்று பவுலின் அனுபவத்திலிருந்து பார்க்கிறோம். 2 கொரி 7:5 வசனம் நாங்கள் மக்கொதொனியா நாட்டிலே வந்தபோது எங்கள் **சரீரத்திற்கு இளைப்பாறுதல்** ஒன்றுமில்லாமல் எப்பக்கத்திலேயும் உபத்திரவப்பட்டோம். புறம்பே போராட்டங்களும் உள்ளே பயங்களும் உண்டென்று பவுல் எழுதுகிறார். சரீரத்திற்கு இளைப்பாறுதல் இல்லாதபடி உத்திரவமும்,துன்பமும் ஏற்பட்டது என்று கூறுகிறார். 2 கொரி 11:23ம் வசனத்தில் அவருக்கு ஏற்பட்ட பாடுகள்பற்றி அவர் விவரித்துகூறுகிறார். அதிகமாய் அடிப்பட்டவன், அதிகமாய் காவலில் வைக்கப்பட்டவன், அநேகந்தரம் மரண அவதிப்பட்டவன், யூதர்களால் ஒன்றுகுறைய 40(39)அடியாக 5 தடவை அடிப்பட்டேன். 3 தடவை மிளாறுகளால் அடிப்பட்டேன். 1 தடவை கல்லெறியுண்டேன். 3 தடவை கப்பற்தேசத்தில் இருந்தேன். கடலில் இரு இராப்பகல் முழுவதும் போக்கினேன். அநேகந்தரம் பிரயாணம் பண்ணினேன். ஆறுகளாலும்,கள்ளர்களாலும் சொந்தஜனங்களாலும்,அந்நிய ஜனங்களாலும்,பட்டணங்களிலும்,வனாந்திரத்திரத்திலும்,சமுத்திரத்திலும்,கள்ள சகோதரர்களாலும் மோசங்கள் ஏற்பட்டன என்று கூறுகின்றார்.

இப்படிப்பட்டபாடுகள் அவர் தீமை செய்தபடியினாலே துன்மார்க்கமாய் வாழ்ந்தபடியினாலோ இந்த பாடுகள் அவருக்கு ஏற்படவில்லை.தேவனை சேவித்தபடியினாலே இந்த பாடுகள் அவருக்கு ஏற்பட்டது. கடவுளுடைய ஊழியத்திலே பாடுகள் உண்டு. இதை நாம் ஒப்புக்கொள்ளவேண்டும். இப்படி பாடுகள் ஏற்படுவதினாலே ஊழியம்செய்யமுடியாது என்று ஓடிவிடக்கூடாது. சோர்ந்து போய் விடக்கூடாது என்று பவுல் கூறுகிறார். 2 கொரி 4:1 வசனம் இப்படிப்பட்ட ஊழியத்தை உடையவர் களாகிய நாங்கள் இயேசுவிடமிருந்து இரக்கம் பெற்றிருப்பதால் சோர்ந்து போகிறதில்லை என்று பவுல் கூறுகிறார். ஊழியத்தைவிட்டு ஓடிப்போய்விடமாட்டோம் என்று கூறுகிறார். என் அருமையான சகோதரனே,சகோதரியே உங்கள் ஊழியத்தில் சாட்சியிலே பாடுகளும், துன்பங்களும் ஏற்படும்போது தைரியமாய் நிற்க ஆண்டவரிடத்தில் உதவி கேள் சோர்ந்துபோகாதே விட்டுவிட்டு ஒடிப்போய்விடாதே!.

அரசு நடத்தும் கிராம பள்ளிக்கூடத்திலே பணிபுரியும் ஒரு ஆசிரியர் சொன்னார். ஐயா, இந்த பள்ளிக்கூடத்திலே இத்தனை பிள்ளைகள் வந்தார்கள் என்று நான் ஆஜர்போட்டு கணக்கு

கொடுக்கவேண்டும். பிள்ளைகள் வந்தாலும்,வராவிட்டாலும் அவர்கள் வந்தார்களென்று நான் பொய்சொல்லவேண்டும். இவ்விதமாய் சொல்வதற்கு என் மனசாட்சி இடம் கொடுக்கவில்லை. நான் ஒரு நல்ல கிறிஸ்தவ விசுவாசி. ஆனால் என்னுடைய **மேலதிகாரிகள்** அவ்விதமாய் செய்யவேண்டுமென்று வற்புறுத்துகிறார்கள். அப்படி செய்தால்தான் ஆசிரியர்களுக்கு கிடைக்கவேண்டிய பணம் கிடைக்கும் என்று கூறுகிறார்கள். அதுமட்டுமல்ல,என்னுடைய உடன்ஆசிரியர்களும்,நீ உண்மையாய் நடந்தால் நீ எங்களைகாட்டிக்கொடுக்கிறாய் என்று அர்த்தம். நீமட்டும் உன்னை **சத்தியவான், நேர்மையானவன்** என்று எண்ணி அப்படி நடந்தால் நாங்கள் எல்லாரும் எங்களுடைய வயிற்றுபிழைப்பை இழக்கவேண்டியிருக்கிறதே! என்று அவர்கள்கூறி என்னை ஏசினார்கள் என்று கூறி மனவருத்தப்பட்டார்.ஆம்.**கோணலான சமுதாயத்திலே** நாம் வாழும்போது சமுதாயத்தின் கோணலுக்கு ஏற்றவாறு நெளிந்து கொடுத்து வாழவேண்டுமென்று மற்றவர்கள் நம்மை வற்புறுத்தலாம். என் அருமையான சகோதரரே,சகோதரியே உன்னுடைய சொந்த வேலையிலே அல்லது அலுவலகத்திலே இவ்விதமான ஒரு நெருக்கத்திலே உள்ளாகியிருக்கிறாயா மற்றவர்கள் எல்லாரும் **லஞ்சம்** வாங்குகிறார்கள் நீமட்டும் வாங்கமாட்டேன் என்றுசொன்னால் உன்னை அவர்கள் காட்டிக்கொடுத்துவிடுவார்கள் அல்லது தவறான உனக்கு விரோதமாக பல குற்றச்சாட்டுகளை கூறிவிடுவார்கள். உன் வேலைபோய்விடக்கூடும். அதற்காக பயந்துதான் மேலதிகாரிகளும், கோணலாய் இருக்கிறார்கள். அவர்களுக்கு பயந்து உன்னுடைய மனசாட்சியை கடினப்படுத்தி சாட்சியை இழந்துவிடுவாயா!, விசுவாசிகளுக்கு பாடுகள்உண்டு. நேர்மையான வழிகளில் நடக்கிறவர்களுக்கு பாடுகள்உண்டு என்று வேதம் தெளிவாய் கூறி நம்மை எச்சரிக்கிறது. 1பேதுரு 2:19 வசனத்தை எடுத்துப்பார்ப்போம். தேவன்மேல் பற்றுதலாயிருக்கிற ஒருவன் மனசாட்சியினிமித்தம் அநியாயமாய் பாடுபட்டு உபத்திரவங்களை பொறுமையாய் சகித்தால் அதுவே பிரீதியாய் இருக்குமென்று பேதுரு எழுதுகிறார். அன்றை சமுதாயத்திலே தேவன்மேல் பற்றுதலாய் தன்னுடைய நேர்மையான மனசாட்சிக்கு ஏற்றவாறு ஒருவன் வாழ்ந்தால் அல்லது பணிபுரிந்தால் அவன் அநியாயமாய் பாடுபடவேண்டிஇருக்கும். பாடுபடுவது அநியாயமாயிருக்கும்போது அதை சகித்துக்கொள்வது கடினமாய் இருக்கிறது அல்லவா!. நாம் செய்த செயலுக்கு இது சரி என்று நமக்கு தெரிந்தால் எப்படியாவது சகித்துக்கொள்ளலாம் அல்லது நான் செய்யாததற்காக அல்லது செய்த நன்மைக்காக அநியாயமாய் பாடுபடவேண்டுமானால் அதை சகித்துக்கொள்வது எளிதல்ல. ஆனாலும் அருமையான சகோதரனே, சகோதரியே இந்த கோணலான சமுதாயத்திலே அநியாயமாய் நாம் பாடுபடவேண்டியிருக்கும். நம்முடைய மனசாட்சியினிமித்தம் நேர்மையாய் வாழ்வதினாலே பாடுபடவேண்டியிருக்கும். அதை சகித்துக்கொள்ள வேண்டுமென்று திருமறை நமக்கு கூறுகிறது. பிலி 2:15 வசனத்திலே **கோணலும்,மாறுபாடானசந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும், கபடற்றவர்களும்,தேவனுடைய மாசற்ற பிள்ளைகளாய் இருக்கும்படிக்கு எல்லாவற்றையும்** முறுமுறுப்பில்லாமலும்,தர்க்கிப்பில்லாமலும் செய்யுங்கள் என்று பவுல் எழுதுகிறான். கோணலான மாறுபாடான சந்ததி. இப்படிப்பட்ட சந்ததியிலே நாம் குற்றமற்றவர்களாய்,கபடற்றவர்களாய் இருக்கவேண்டுமானால் அந்தசமுதாயம் நிச்சயமாய் நம்மை பகைக்கத்தான் செய்யும். அலுவலகத்திலே,பள்ளிக்கூடத்திலே வேலைசெய்யும் இடத்திலே இந்தவிதமான எதிர்ப்பும்,பகையும் உனக்கு ஏற்படலாம். அதை சகித்துக்கொள்வதற்கு ஆயத்தமாயிருக்கிறாயா? கர்த்தர் கைவிட்டு விட்டார் என்று எண்ணிவிடாதீர்கள். **சாத்ராக்,மேஷாக்,ஆபேத்நேகோ** தேவனுக்கு நாங்கள் பணிவோமே தவிர வேறெந்த சிலைக்கு **முன்பாக வணங்கமாட்டோம்** என்று கூறினபோது அக்கினி சூளையை ஏழு மடங்கு அதிகமாக்கிக் சூடாக்கினார்கள். அவர்களை தூக்கி அந்த அக்கினிசூளையிலே எறிந்தார்கள். கடவுள் அவர்களை கைவிடவில்லையே அப்படியே உன்னையும் கைவிட்டுவிடமாட்டார். உன் வேலையின் பாதுகாப்பிற்காக அல்லது உன்னுடைய வேலை உயர்வை

மறுபடுயுமாக முன்னேற்றுவதற்காக நீங்கள் மனசாட்சியை கடினப்படுத்தி தவறான காரியத்தில் நுழைவாயானால் தேவனை அவமகிமைபடுத்துகிறாய் தம்மை கனவீனப்படுத்துகிறவர்களை அவரும் கனவீனப்படுத்துவார் என்று வேதம் கூறுகிறது(1சாமு 2:30). ஆனால் அவரை கனம் பண்ணுகிறவர்களை நிச்சயமாய் அவர் கனம் பண்ணுவார். என் அருமையான நண்பனே! உன்னுடைய வாழ்க்கை சூழ்நிலைகளிலே கர்த்தரை காட்டிக்கொடுத்துவிடாதே. வேலையினிமித்தமாக வேலையிலுள்ள நெருக்கங்களில் நிமித்தமாக வேளையிலே கோணலான மாறுபாடாக நடக்கும் மற்றவர்களில் நெருக்கங்களின் மூலமாக கர்த்தரைக் காட்டிக்கொடுத்துவிடாதே. பாடு அனுபவிப்பதற்கும் ஆயத்தமாயிருக்கவேண்டும். கடவுளுடைய மக்களுக்கு விசுவாசிகளுக்கு இந்த உலகத்திலே பாடுகள்உண்டு என்று வேதம் தெளிவாய் போதிக்கிறது. நேர்மையாய் வாழ்வதன நிமித்தமாய் பாடுகள் உண்டு. இன்னும் 1 பேதுரு 4:4 வசனத்தில் எடுத்துப்பார்ப்போம். அந்த துன்மார்க்கன் உளையிலே அவர்களோடுகூட நீங்கள் விழாமலிருக்கிறதினாலே அவர்கள் ஆச்சரியப்பட்டு உங்களை தூஷிக்கிறார்கள். மாம்சஇச்சைக்கும் காமவிகாரத்திற்கும், அசுத்தத்திற்கும் விலக்கிகாத்துக்கொள்கிறவர்களைப்பார்த்து நிச்சயமாய் தூஷிக்கத்தான் செய்வார்கள். உன்னை அவர்கள் ஏசுவார்கள். துன்புறுத்து வார்கள். ஆனால் அதற்காக அவர்களோடு ஒத்துக்போய்விடக்கூடாது. தவறான செயல்களுக்கு சமரசம் செய்துவிடக்கூடாது. ஆண்டவர் காட்டிய நேர்மை யான பாதையில் தூய்மையான பாதையிலே நடக்கத்தான் செய்யவேண்டும். இப்படி தூய்மையின் பாதையில் நடப்பதினாலே அக்கிரமத்தில் அசுத்தத்தில் நடக்கிறவர்கள் நம்மை துன்புறுத்தகூடும். இவ்விதமாகவும் நமக்கு பாடுகள் ஏற்படலாம். அதே அதிகாரம் 14ம் வசனம் நீங்கள் கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் நிந்திக்கப்பட்டால் பாக்கியவான்கள். ஏனென்றால் தேவனுடைய ஆவியானவர் உங்கள்மேல் தங்கியிருக்கிறார். அவர்களாலே தூஷிக்கப்படுகிறார். உங்களாலே மகிமைப்படுகிறார். மறுபடியும் 16ம் வசனம் ஒருவன் கிறிஸ்தவனாய் இருப்பதினாலே பாடுபட்டால் வெட்கபடாமலிருந்து அதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்தக்கடவன் என்று பார்க்கிறோம். இப்படி கிறிஸ்துவிமித்தாவும், கிறிஸ்துவை விசுவாசிப்பதனாலும் நமக்கு பாடுகள் ஏற்படக்கூடும். ஒரு குடும்பத்திலே ஒரு சகோதரன் மட்டும் கர்த்தரை விசுவாசித்து அவரை ஏற்றுக்கொண்டு திருமுழுக்கு பெற்றுவிட்டான். அதினிமித்தமாக குடும்பத்தில்-சபையில் மற்றவர்கள் அவனை ஒதுக்கிவிடக்கூடும். ஜாதியைவிட்டுகூடதள்ளிவிடக்கூடும். சொத்தில் அவருக்கு பங்கில்லை என்றும் கூறக்கூடும். இதையெல்லாம் நாம் சந்திக்க ஆயத்தமாய் இருக்கவேண்டும். கர்த்தருக்காக இப்படி பாடுஅனுபவிக்கிறவர்களுக்கு நிச்சயமாக ஒரு பலன் உண்டு. நிச்சயமாய் அவர்கள் நித்தியத்திலே தங்களுடைய பங்கான ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்வார்கள் என்று வேதத்திலே நாம் வாசிக்கிறோமல்லவா? மத் 5:10ல்ஆண்டவர் என்ன சொன்னார். நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்,பரலோக இராஜ்ஜியம் அவர்களுடையது. என்னிமித்தம் உங்களை நிந்தித்து துன்பப்படுத்த பலவிதமான தீமையான மொழிகளையும், உங்கள் பேரில் பொய்யாய் சொல்வார்களானால் பாக்கியவான்களாய் இருப்பீர்கள். சந்தோஷப்பட்டு களிக்கூறுங்கள். பரலோகஇராஜ்ஜியத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்.

இதைத்தான் பேதுருவும் எழுதுகிறான். நீங்கள் கிறிஸ்துவினிமித்தம் நிந்திக்கப்பட்டால் பாக்கியவான்கள். ஏனென்றால் தேவனுடைய ஆவியானவர் உங்கள்மேல் தங்கியிருக்கிறார். அவர்களால் தூஷிக்கப்படுகிறார். உங்களால் மகிமைப்படுகிறார் என்று கூறுகிறார். மகிமையின் ஆவியானவர் நம்மேல் தங்கியிருக்கிறார். எவ்வளவு நிச்சயமான வாக்குத்தத்தமல்லவா. திருமறையிலே தேவனுடைய வல்லமையினாலே பெரிய காரியங்களை சாதித்த பக்தர்களைப்பற்றி பார்க்கிறோம். அதே சமயத்தில் பாடு அனுபவித்த பக்தர்களைபற்றியும் வேத வசனம் அநேக சத்தியங்களை நமக்கு

**தருகிறது. எபி 11ம் அதிகாரத்தை எடுத்துக்கொள்ளுங்கள். இங்கே விசுவாச வீரர்களின் பட்டியலைக் காண்கிறோம். அதிலே எபி 11:33வது வசனத்தை எடுத்துப்பார்ப்போம். விசுவாசத்தினாலே அவர்கள் இராஜ்ஜியங்களை ஜெயித்தார்கள். நீதியை நடப்பித்தார்கள். வாக்குதத்தங்களை பெற்றார்கள். சிங்கங்களின் வாயை அடைத்தார்கள். அக்கினியின் உக்கிரகத்தை அவிழ்தார்கள். பட்டயக்கருக்குக்கு தப்பினார்கள். பலவீனத்தில் பலன்கொண்டார்கள். யுத்தத்தில் வல்லவர்களானார்கள். அந்நியருடைய சேனைகளை முறியடித்தார்கள். ஸ்திரீகள் சாகக்கொடுத்த தன்னுடையவர்களை உயிரோடு எழுந்திருக்கப் பெற்றார்கள். வேறு சில மேன்மையான உயிர்த்தெழுதலை அடையும்படிக்கு விடுதலைபெற சம்மதியாமல் வாதிக்கப்பட்டார்கள் என்று பார்க்கிறோம்.**

**இப்படிப்பட்ட மனிதர்களைப் பார்க்கும்போது அவர்கள் விசுவாசத்தினாலே அடையாளங்களையும், அற்புதங்களையும் அனுபவித்தார்கள். பெரிய விடுதலையைப் பெற்றார்கள் என்று நம் அறிந்துக்கொள்ளலாம். ஆனால் அதே சமயத்திலே விசுவாசத்தினாலே விடுதலையையும் வெற்றியையும் மட்டுமல்ல, பாடுஅனுபவிக்க தமக்கு சக்தியும், கிருபையும் கிடைக்கிறது என்பதையும் திருமறை எடுத்துக்காட்டுகிறது. இதை நாம் மறந்துவிடக்கூடாது. ஆகையினாலே நம்முடைய விசுவாசம் ஒரு பக்கமாகவே இருக்கக்கூடாது. திருமறையைச் சார்ந்து இருக்கவேண்டும். எப்போழுதும் அடையாளங்களும்,அற்புதங்களும் நடைபெறும். விடுதலை கிடைத்துவிடும். நம்முடைய பாரங்களெல்லாம் நீக்கபெறும். நாம் செழுமையும்,வளமையுமுள்ளவர்களாய் வாழலாம் என்று எண்ணுவோமானால் அது தவறாகும். அவ்விதமான போதனையும்,அறைக்குறையான சத்தியமான படியினாலே அது தவறான போதனையாகும். இன்றைக்கு நம்முடைய விசுவாசிகளுக்கு நடுவிலே அவ்விதமான போதனைகள் நிலவிவருகின்றன. இதற்கு நாம் விழிப்புள்ளவர்களாய் நம்மை காத்துக் கொள்ளவேண்டும்.**

**இதே எபி 11:36வது அதிகாரம் 36வது வசனம் எடுத்துப்பார்ப்போம். வேறு சில நிந்தைகளையும்,அடிகளையும்,கட்டுகளையும்,காவலையும் கர்த்தர் அனுமதித்தார். அவர்களுக்கு விடுதலை கிடைக்கவில்லை. அவர்கள் அனுபவிக்க வேண்டிய கஷ்டங்களை அனுபவிக்கும்படியாக கிருபை கிடைத்தது. இதுவும் விசுவாசத்தினாலே கிடைத்த வல்லமைதான் 37வது வசனம் கல்லெறியுண்டார்கள். வாளால் அறுப்புண்டார்கள். ஏசாயா தீர்க்கதரிசியை மனாசே அரசன் வாளினாலே அறுத்துக்கொன்றான் என்று பாரம்பரியம் கூறுகிறது. பரீட்சை பார்க்கப்பட்டார்கள், பட்டயத்தினாலே வெட்டுப்பட்டு மரித்தார்கள். செம்மறியாட்டு தோல்களையும், வெள்ளாட்டுத் தோல்களையும் போர்த்துக்கொண்டு திரிந்து உபத்திரவத்தையும், துன்பத்தையும் அனுபவித்தார்கள். ஏன் கர்த்தர் அவர்களை விடுவிக்கவில்லை. அவர்கள் பாவம்செய்துவிட்டார்களா? அல்லது அவர்களுக்கு அதற்கான விசுவாசமில்லையா?. இப்படியெல்லாம் வியாக்கியானம் கூறி, நாம் நம்மை குழப்பிக்கொள்ளக்கூடாது. மற்றவர்கள் நம்மை குழப்புவதற்கு இடங்கொடுக்கக்கூடாது.**

**விசுவாசிகளின் பாடுகளுக்கு வியாக்கியானம் கொடுக்க தேவன் யாருக்கும் அனுமதி கொடுக்க வில்லை. அப்படிப்பட்ட வியாக்கியானம் திருமறையிலேயே கொடுக்கப்படவில்லை. ஏன் என்கிற கேள்விக்கு எப்போழுதும் வேதத்தில் பதில் இல்லை. 38வது வசனம் உலகம் அவர்களுக்கு பாத்திரமாய் இருக்கவில்லை. அவர்கள் வனாந்திரங்களிலேயும்,மலைகளிலேயும், குகைகளிலேயும், பூமியின் வெடிப்புகளிலேயும் சிதறுண்டு அலைந்தார்கள். இவர்கள் எல்லாரும் விசுவாசத்தினாலே நற்சாட்சி பெற்றும் வாக்குதத்தம் பண்ணப்பட்டதை அடையாமற்போனார்கள். இவ்விதமாய் பாடு அனுபவித்த பக்தர்களைப்பற்றி இந்த பகுதியிலேயே பார்க்கிறோம். இந்த பாடு அனுபவித்த பக்தர்களைப்பற்றி நாம் சில சத்தியங்களை வேதத்திலே தொடர்ந்து கற்போமாக!.**

# உலக பிரசித்திப்பெற்ற ஊழியர் Dr.பில்லிகிரஹாம் அவர்களின் இறுதி யாத்திரை

Dr. பில்லி கிரஹாம் அவர்கள் உலக பிரசித்திபெற்ற சுவிசேஷகராகும். கடைசி வரை **வசனத்தைவிட்டு விலகாமல்** கலப்பில்லா **சுவிசேஷத்தை** தன் மரணம் வரை 180 உலக நாடுகளில் பிரசங்கித்தவர். இவர் சுமார் 30 கோடி மக்களுக்கு சுவிசேஷம் அறிவித்திருக்கிறார்.

இவர் மரண விவரத்தை 2018 ஏப்ரல் மாத ஜாமக்காரனில் சுருக்கமாக எழுதியிருந்தேன். இப்போது இவரின் அடக்க ஆராதனையான இறுதி யாத்திரையைப்பற்றி வாசகர்களுக்கு அறிவிக்கவேண்டியது மிக அவசியம் ஆகும்.

இவருடைய **அடக்க ஆராதனையில்** பங்கெடுக்க முழு உலக நாடுகளிலிருந்தும் மொத்தம் 12000 நபர்களுக்கு மட்டுமே அடையாள அட்டையும் **அனுமதியும்** கொடுக்கப்பட்டது. Dr.பில்லியின் ஒரு பிரசங்கத்தை கேட்கவே கோடிக்கணக்கில் ஆட்கள் கூடும்போது இவருடைய அடக்க ஆராதனையில் கடைசியாக அவரின் முகத்தைக்காண எத்தனை கோடி மக்கள் ஆசைப்படுவார்கள். அத்தனை பேர்களுக்கும் அனுமதி கொடுத்திருந்தால் உலகம் முழுவதிலும் உள்ள நாடுகளில் உள்ள மக்கள் அத்தனைபேரும் அமெரிக்கா வந்து இறங்கிவிட்டால் அமெரிக்க நாடே ஸ்தம்பித்து போகுமே!. அவருடைய உடலை கல்லறைக்கு எடுத்துசெல்ல முடியாதபடி அமெரிக்கா நாடே மக்களால் நிறைந்திருக்கும் என்று வர்ணித்தார் ஒருவர்.

உலகம் அனைத்திலும் உள்ள ஒரு நாட்டுக்கு **இருவர் மட்டும்** அடக்கஆராதனையில் பங்கெடுக்க தெரிந்தெடுக்கப்பட்டனர். நம் முழு **இந்தியாவிலும்** இரண்டு ஊழியர்களுக்கு மட்டுமே அனுமதி கிடைத்தது.



அவருடைய உடலை **விலை உயர்ந்த** (Coffin) சவபெட்டியில் வைக்காதபடி **சாதாரண மரத்தால்** செய்யப்பட்ட பெட்டியில் அதில் எந்தவித அழகு மர வேலைப்பாடுகளும் செய்யப்படாத பெட்டியில் அவர் உடல் வைக்கப்பட்டது. அந்த சவ பெட்டியும் **சிறை கைதிகளால்** செய்யப்பட்டதாக இருக்கவேண்டும் என்பது அவர் குடும்பத்தினரின் ஆசை. காரணம், Dr.பில்லி **சிறை கைதிகளிடம்** சுவிசேஷம் அறிவிக்கும் ஊழியத்தையும் செய்தார் என்பதும் ஒரு காரணமாகும்.

படத்தில் அந்த சாதாரண டப்பா போன்ற பெட்டியை ரரணுவ வீரர்களால் சுமக்கப்படடு கொண்டுவரப்பட்டது. காரணம் இவர் அமெரிக்க **ஜனாதிபதிகளின் பாஸ்டர்** என்று அழைக்கப்பட்டார். Pastor to Presidents என்ற பெயர் அமெரிக்க மக்களால் இவருக்கு அளிக்கப்பட்டது. அமெரிக்காவில் **கடவுள் இல்லை** என்று கூறும் நாத்திகர்களாலும், கடவுளை நம்புகிறவர்களாலும், அனைத்து சபை பிரிவினர்களாலும் மிகவும் விரும்பப்பட்ட சுவிசேஷகரானபடியால் இவரை **அமெரிக்க நாட்டின் தேச பிதா** என்று அழைக்கப்பட்டார்.



இவரின் அடக்க ஆராதனையில் **அமெரிக்க ஜனாதிபதி** மரித்தால் எப்படி மரியாதை செய்வார்களோ அதைப்போலவே எந்த அமெரிக்க அரசாங்க பதவியும் வகிக்காத, எந்த அரசியல் செல்வாக்கும் இல்லாத ஒரு எளிய சுவிசேஷகனுக்கு ஜனாதிபதிக்கு கொடுக்கும் மரியாதையின்படி **அமெரிக்க தேசிய கொடியை** பில்லி அவர்களின் சவப்பெட்டியின்மேல் போர்த்தி ஜனாதிபதிக்குறிய மரியாதையை செலுத்தினார்கள் உலக நாடுகளாலும் சொந்த தேசத்தினரிலும் புகழப்பட்ட ஒரே சுவிசேஷகர் உலகில் Dr. பில்லிகிரஹாம் அவர்களாகும்.

உலக கிறிஸ்தவ ஊழிய ஸ்தாபனங்களில், சபைகளில் **சமூக சேவை** ஸ்தாபனங்களில் எந்த பண ஊழல்களும் நடந்து கர்த்தரின் நாமம் தூஷிக்கப்பட்டுவிடாதபடி இருக்க Evangelical Council for Financial Accountability (ஊழிய பண கணக்கு ஒப்புவிப்பு சங்கம்) என்ற ஒரு சங்கத்தை தொடங்கினார். இதனால் Dr.பில்லி அவர்களின் ஊழியத்துக்கு வரும் பெரும் பணத்தொகையை குறித்து யாரும் குற்றம் கண்டுபிடிக்கமுடியாமல் போனது.

ஆனால் அவருடைய சமூக சேவை ஸ்தாபனமான **நல்ல சமாரியன் டிரஸ்ட் மூலம் உலகின்** பல்வேறு **ஏழை நாடுகளுக்கு** பண உதவியும் பொருள் உதவியும் ஏராளமாக கொடுக்கப்பட்டது. அப்படி பணம் பொருள் பெற்ற சிலர் **ஆப்பிரிக்க** நாடுகளிலும், **இந்தியாவிலும்** அந்த பணத்தை பெற்று ஊழல் புரிந்தனர். அதை கண்டுபிடித்து அவர்களுக்கு அனுப்பப்பட்ட பண உதவி உடனே நிறுத்தப்பட்டது. இப்படி அனுப்பப்படும் பணம், பொருள் சரியான வழியில் செலவு செய்யப்படுகிறதா? என்று கண்டுபிடிக்க **தனி குழுவை** அந்த ஸ்தாபனம் ஏற்பாடு செய்திருந்தது. இந்தியாவுக்கு **சுனாமி பேரழிவால்** பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ **பல கோடி ரூபாய்கள்**

**நம் CSI சினாட் மூலம் அனுப்பப்பட்டு பல கோடி ரூபாய்களை பெற்ற சில பிஷப்மார்,** சினாட் தலைமை செயலரும், சில பிஷப்மாரும் பெரிய ஊழல் செய்து கண்டுபடிக்கப்பட்டு அவர்கள் சிறையில் அடைக்கப்பட்டார்கள். டாக்டர்.பில்லி அவர்களைப்போல் **கண்காணிப்பு குழுவினரை** சுனாமி பண உதவி செய்த அந்த அமெரிக்க ஸ்தாபனத்தார் ஏற்பாடு செய்திருந்தால் CSIக்கு இத்தனை பெருத்த அவமானம் உண்டாயிருக்காது. சுனாமியினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ **பல கோடி ரூபாய்கள்** வாங்கி சென்ற சில CSI டையோசிஸ் பிஷப்மார்களில் இன்றுவரை **கணக்கு ஒப்புவிக்காதவர்கள்** உண்டு. இதை குறித்து ஜாமக்காரனில் நான் எழுதியதால் **கேரளத்தில் இரண்டு** டையோசிஸ்களில் நான் பிரசங்கிக்க ஊழல் செய்த அந்த குறிப்பிட்ட பிஷப்புக்கு விருப்பம் இல்லாமல் போனது. இப்போதும் அவர் என்னை வெறுத்த நிலையில்தான் இருக்கிறார். ஆனால் டையோசிஸ் ஆயர்கள்,நிர்வாகிகள்,விசுவாசிகள் இன்னும் என்னை நேசிக்கிறார்கள். Dr. பில்லிகிரஹாம் மரண செய்தியும் அவர் உண்மையான பண ஊழலற்ற ஊழியமும் அவர்களை உணர்த்தட்டும். ஜாமக்காரன் ஊழியத்தை தொடர்ந்து தாங்குகிறார்கள்.

Dr. பில்லிகிரஹாம் அவர்கள் வேதாகம கல்லூரியில் BTh என்ற படிப்பை மட்டுமே படித்திருந்தார் என்றாலும் சிறந்த **பைபிள் டீச்சர்** என்றும் **வேதாகம பண்டிதர்** என்றும் அழைக்கப்பட்டார். பல வேதாகம கல்லூரிகளிலும் பல்வேறு நாடுகளில் உள்ள **பல்கலை கழகங்களும்** இவருக்கு கொடுத்த **டாக்டர்** பட்டங்கள் ஏராளம்.

இவர் **கல்லறை பலகையில் இவர் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷ பிரசங்கியார்** என்று மட்டுமே எழுதப்பட்டது.

▣ 2013ம் ஆண்டு தனது **95 வது பிறந்த நாள்** அன்று **அமெரிக்கா** மற்றும் கனடாவிலுள்ள 480க்கும் கூடுதலான **தொலைகாட்சி மையங்களோடு** இணைந்து தன்னுடைய வாழ்க்கையின் கடைசி செய்தியை பிரசங்கித்தார். ஏன் வாழ்க்கையின் **கடைசி செய்தி** என்று அவர் குறிப்பிட்டார் என்றால் அவருக்கு பர்கின்ஸஸ் என்ற **நரம்பு தளர்ச்சி வியாதியால்** பல மாதங்களாக கஷ்டப்பட்டார். பேசும்போது வாய் குழறி நடுக்கம் உண்டாக ஆரம்பித்தது. டாக்டர்கள் இனி அதிக நேரம் அவர் **நிற்க கூடாது,அதிக நேரம் பேசக்கூடாது** என்று அறிவுறுத்தினர். அவருக்கும் இனி தான் **பிரசங்கிக்க முடியாது,** தன் **ஊழியத்தின் கடைசிப்பகுதிக்கு** வந்துவிட்டோம் என்று உணர்த்தப்பட்டதால் அதுதான் **தன் கடைசி பிரசங்கம்** என்று உலக நாடுகளுக்கு அறிவித்துவிட்டார்.

அந்த **கடைசி பிரசங்கத்தை உலகம் முழுவதிலும் உள்ள மக்கள் ஒரே சமயத்தில் கனத்த இருதயத்துடன்** கவனித்தார்கள். அப்போது அவர் தன் 95 வருட பிறந்த நாள் உடையாக **புதிய கோட் அணிந்திருந்தார்.** நிருபர்கள் அவரிடம் டாக்டர் ஏற்கனவே பல கோட்கள் உங்களிடம் இருக்க வழக்கத்திற்கு மாறாக **புதிய கோட்** அணிந்திருக்கிறீர்களே! என்று கேட்க அதற்கு அவர் இன்று என் 95 வருட **பிறந்த தினம்** மேலும் இது என்னுடைய **கடைசி பிரசங்கம்** ஆகும். இப்போது நான் ஊடுத்தியிருக்கும் **இந்த புதிய கோட்** என் **அடக்க ஆராதனைக்கு** பயன்படும் என்றாராம். எத்தனை **பெரிய ஆழமான மரண ஆயத்தம்** அவருக்குள் நிறைந்திருந்ததை இந்த நிகழ்ச்சி உணர்த்துகிறது.

▣ சிலர் அவரிடம் உங்களுடைய **கடைசி ஆசை** என்ன என்றார்கள். அதற்கு அவர் நான் மரித்து பரலோகத்துக்கு போகும்போது **ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து என்னை பார்த்து உண்மையும் உத்தமும் உள்ள ஊழியக்காரனே என்று என்னை அழைக்க வேண்டும். அதுதான் என் ஆசை என்றார்.**

▣ ஒரு முறை அவர் வியாதி படுக்கையில் படுத்திருந்தார். அதை குறித்து அவர் குறிப்பிடும்போது, 2002ம் ஆண்டு மரணப்படுக்கையில் நான் இருந்தேன். அப்போது **என் வாழ்க்கை முழுவதும் என் கண்முன்** வருவதை கண்டேன். அப்போது நான் கர்த்தரிடம், நான் ஒரு **பெரிய பிரசங்கி** என் ஊழியத்தில் **ஏராளமான மக்களுக்கு** நான் பிரசங்கித்திருக்கிறேன் என்று உரிமை பாராட்டி கூறவில்லை. மாறாக, **கர்த்தாவே** நான் ஒரு பாவி உம்முடைய **பரிசுத்தம்** எங்கே! **என்னுடைய பரிசுத்தம் எங்கே!.** ஆகவே எனக்கு **இன்னும் பாவ மன்னிப்பு தேவை**! எனக்கு **சிலுவை தேவை! என் இருதயத்தில் சமாதானம் தாரும்** என்று வேண்டினேன். உடனே தெய்வம் எனக்கு **அற்புதமான சமாதானத்தை** அருளினார். அன்று கிட்டிய **சமாதானம் இன்று வரை** என்னைவிட்டு **அகலவில்லை** என்று சாட்சி கூறினார்.

Dr. பில்லிகிரஹாம் அவர்கள் மரணத்துக்குபின் உலக நாடுகளில் அவரைக்குறித்தும், அவர் சரித்திரத்தைக் குறித்தும் **எழுதாத பத்திரிக்கையே இல்லை!. மரித்தும் பேசும்** தேவ ஊழியர் Dr. **பில்லி கிரஹாம்** அவர்கள் ஆகும்.

உலகமே தலை குனிந்து மரியாதை செலுத்தும் ஒரே சுவிசேஷகன் Dr. பில்லி கிரஹாம் அவர்களாகும். நான் அவரைப்பற்றி எழுதியது ஒரே ஒரு துளி ஆகும். அவரைப்பற்றி இன்றைய ஊழியர்கள் படித்துக்கொள்ளவேண்டிய பாடம் மிக அதிகம். இப்படிப்பட்ட ஊழியரை உலகுக்கு தந்த தெய்வத்தை நாம் துதிப்போம். கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக. **Dr. பில்லிகிரஹாம்** அவர்களுக்கு **ராஜமரியாதையுடன்** அவர் **மரண ஊர்வலம்** நடைபெற்றது.

# E-mail

ஜாமக்காரன் மாதம் வரவில்லை என்று சிலர் எழுதியிருக்கிறார்கள். நீங்கள் எழுதும் இ-மெயில் அல்லது கடிதத்தில் உங்கள் **பழைய விலாசத்தையும்** உங்களுக்கு **கொடுக்கப்பட்ட நம்பரையும், தொலைபேசி எண்ணையும்** எழுதினால் உங்கள் விலாசத்தை லட்சக்கணக்கான விலாச பட்டியலில் தேடும் நிலை ஏற்படாது. ஆகவே இனி எழுதுபவர்கள் எத்தனை முறை எனக்கு பழக்கமானவர்களாக இருந்தாலும் உங்கள் முழுவிலாசத்தையும் மனதில் வைத்துக் கொள்ளமுடியாது. ஆகவே உங்கள் பழைய விலாசத்தையும்,புது விலாசத்தையும் தெளிவாக குறிப்பிடுங்கள். இந்த விஷயத்தில் உங்கள்ஒத்துழைப்பை நாடுகிறேன். புது விலாசம் எழுதி அறிவித்தால் e-mailக்கு அல்லது உங்கள் கடிதத்துக்கும் உடனே பதிலும் கிடைக்கும். ஜாமகாரனும் தாமதிக்காமல் உங்கள் **புது விலாசத்தில்** அனுப்பிவைக்கப்படும். காணிக்கை விவரத்தை எழுதி அறிவிக்கிறவர்கள் உங்கள் **தொலைபேசி எண்ணையும்** மறக்காமல் குறிப்பிடுங்கள். **காணிக்கை கிடைத்த விவரத்தை உங்களுக்கு தொலைப்பேசியில்** உடனே அறிவிப்பேன். ஜெபிப்போம்.

# CSI MADURAI DIOCESE - SIVAKASI
# CSI RAGLAND MEMORIAL CHURCH CONVENTION







**விருது நகர்** மாவட்டத்தில் உள்ள சிவகாசி CSI ராக்லாந்து நினைவு ஆலயத்தில் நடந்த கன்வென்ஷன் மிகவும் ஆசீர்வாதமாக அமைந்தது.

இந்த சபையின் ஆயர். **Rev.Stanley Jayaraj** அவர்களும், சபை நிர்வாகிகளும் நல்ல ஆவிக்குரிய ஜெபத்துடன் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். இந்த கூட்டங்கள் யாவும் ஆசீர்வாதமாக அமைந்தது. கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக.

## ONLINE BANKING

காணிக்கையை மணிடிரான்ஸ்பர்(NET Transfer) வழியாக அனுப்ப விரும்புகிறவர்களுக்கு என்னுடைய வங்கி தகவல்கள்:

**A/c Name : Dr. M.G.E.PUSHPARAJ :** வெளிநாட்டில் உள்ளவர்கள் காணிக்கை அனுப்ப (**Overseas Doners):**

**1). Bank Name : State Bank of India - Srirangapalayam Branch - SALEM -1970**
**A/c No. 10764116842, Swift code: SBININBB637**
இந்தியாவில் உள்ளவர்கள் காணிக்கையை அனுப்ப **(India Doners):**
**IFSC CODE : SBIN0001970- A/c No.10764116842**

2) **Bank Name: CANARA BANK, (Suramangalam Branch) - 1219**
வெளிநாட்டில் உள்ளவர்கள் காணிக்கை அனுப்ப(**Overseas Doners):**
**SWIFT CODE: CNRBINBBSLM - A/c No. 1219101013622**
இந்தியாவில் உள்ளவர்கள் காணிக்கையை அனுப்ப**India Doners:**
**IFSC CODE : CNRB0001219 - A/c No. 1219101013622,**
**MICR CODE: 636015005.**



# Rev. ஞானராஜா அவர்கள் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்:

1964 ம் வருடம் முதல் சகோதரன் ஞானராஜா அவர்கள் மிக நெருங்கிய ஆவிக்குரிய நண்பராகவும், நல்ல விமர்சகராகவும் இருந்தார். ஆரம்ப காலம் தொடங்கியே என் பத்திரிக்கையின் தீவிர வாசகர் ஆவார்.

1953ம் வருடம் VBSஐ **சகோ.பி.சாமுவேல்**(பெத்தேல் பெலோஷிப்- டேனிஸ்பேட்டை சேலம்) அவர்கள் சபை சிறுவர்கள்,வீதியில் உள்ள புற மதத்தினரின் பிள்ளைகள் இவர்களுக்கு கதைகள்,பாடல்களை, பாடலின் அர்த்திற்கேற்ப செய்கைகள்(Action song) மூலமாக பாட்டின் அர்த்தத்தை மனதில் பதிய வைப்பது, இவருடைய ஆரம்ப ஊழியமாக இருந்தது. இதை பிள்ளைகளின் விடுமுறை நாட்களில் அவர்களை ஒரு இடத்தில் ஒன்று சேர்த்து அவர்களுக்கு **இயேசு** என்ற **விதையை** விதைக்கும் மிகப் பெரிய ஊழியத்தை சிறப்பாக ஆரம்பித்தார். அண்ணாச்சி அவர்கள் தன்னோடு **Rev.சாம் கமலேசன்** போன்ற நான்கு நண்பர்களை சேர்த்து இணைந்து தமிழ்நாடு முழுவதும் செயல்பட்டார். அந்த நாட்களில் சகோ.சாமுவேல் அண்ணாச்சி அவர்களின் அந்த **விடுமுறை வேதாகம பள்ளி**(Vacation Bible School)VBS மிகப் பெரிய வெற்றியை கொடுத்தது. அந்த நாட்களில் சகோ.பி.சாமுவேல் அவர்களுடன் இணைந்த நான்கு நண்பர்களும் நடத்திய VBSஐ A -Team என்பார்கள்.

அதன்பின் 1964ம் வருடம் தொடங்கப்பட்டதுதான் B- Team என்பது. இதில் **Rev.மாணிக்க வாசக திரவியம்**(அப்போது அவர் ஆயர் அல்ல.அதன்பின் ஆயராகி பிஷப் எலக்ஷனில் பேனலில் வந்தவர் இப்போது இவர் சிஎஸ்ஐ மெட்ராஸ் டையோசிஸ்ஸிலிருந்து ஓய்வுபெற்றுவிட்டார்). இவரோடு **சகோ.ஞானராஜா, சகோ.வீரராஜ்** நான்காவதாக **Dr.புஷ்பராஜ்** ஆகிய நான் ஆக நான்கு பேரும் இணைந்து VBS- B- Team ஆக தமிழ்நாடு முழுவதும் தனியாகவும்,இருவராகவும், மூவராகவும் பிள்ளைகளின் எண்ணிக்கைக்கு ஏற்றபடி VBS டைரக்டர் அண்ணாச்சியின் ஏற்பாட்டின்படி ஊழியம் செய்தோம்.

**சகோ.ஞானராஜா** அவர்கள் 1964ம் வருடம் டேனிஷ்பேட்டை **பெத்தேல்** பள்ளிக்கூடத்தில் இடைநிலை ஆசிரியராக பணியாற்றிக்கொண்டே VBS ஊழியத்தையும் தொடர்ந்தார். தன் ஊழியம் சிறுபிள்ளைகள் மத்தியில்தான் என்பதை உறுதிசெய்துகொண்டபின் ஆசிரியர் வேலையை விட்டு VBSன் முழுநேர பணியாளராக ஊழியத்தில் இறங்கினார். இவரோடு **சகோ.வீரராஜ்** அவர்கள் இணைந்தார். வீரராஜ் அவர்கள் நன்றாக அககார்டின் வாசிப்பார். இவர்கள் இருவரும் இரட்டையர்களா இணைந்து VBS மற்றும் வாலிபர் கூட்டம் ஆகியவற்றையும் நடத்தினார்கள். VBSக்கு நல்ல வரவேற்பு இவர்கள் மூலமாக கிடைத்தது.

சகோ.**ஞானராஜா** அவர்களின் **மீசை** பிள்ளைகளை மிகவும் கவர்ந்தது. அது அவருடைய டிரேட்மார்க்காக அமைந்தது. அதன்பிறகு சகோ.மாணிக்க வாசக திரவியம் அவர்களும் மெத்தடிஸ்ட் பிஷப்பாகி ஓய்வுபெற்ற **Rt.Rev.சம்பத்** அவர்களும் அடிக்கடி எங்கள் B- Teamல் இணைந்து ஊழியம் செய்தனர். **சகோ.சம்பத்** அவர்கள் அந்த காலத்தில் கிட்டார் வாசித்து மிக

அழகாக ஆங்கில பாடல்களை பாடுவார். சகோ.சம்பத் அவர்களுக்கு தமிழ் அவ்வளவாக அவருக்கு பேசவராது. வருடத்தில் நான்குமுறை பல்வேறு சபைகளிலிருந்து VBS வாலிபர் கூட்டம் நடத்த அழைப்புகள் வரும். அதை ஒழுங்காக்கி அழைப்பவர்களின் தேதிகளின் வரிசைபடி எங்கள் நால்வரையும் சகோ.பி.சாமுவேல் அண்ணாச்சி அவர்கள் தமிழ்நாடு முழுவதும் தனித்தனியாக பிரிந்தும், இரண்டு பேராகவும் அனுப்பி வைப்பார்.

இடையே வேதாகம கல்லூரியில் படிக்க வாய்ப்பு கிடைத்தது. Rev.மாணிக்க வாசக திரவியம் அவர்கள் எங்கள் தொடர்பிலிருந்து பிரிந்தார். Rev.சம்பத் அவர்களும் பிரிந்தார். ஆனால் சகோ.ஞானராஜ் அவர்களும், சகோ.வீரராஜ் அவர்களும் வேதாகம கல்லூரி பயில சென்றாலும் VBSஐ அவர்கள் முழுவதுமாக விட்டுவிடாமல் அடிக்கடி விடுமுறை காலங்களில் இணைந்து செயல்பட்டார்கள். VBS என்ற பெயரில் பெங்களூரை மையமாக்கி Rev.**மாசில்லமணி** அவர்கள் மேலாளராக அமர்ந்தார். அதன்பின் VBS பொருப்பில் பெரிய அளவில் விரிவாக்கப்பட்டு இயங்கியது. **கேரளா,ஆந்திரா,கர்நாடகா** இன்னும் இந்திய மாநிலங்கள் முழுவதற்கும் VBS ஊழியம் பரவியது. தமிழ்நாட்டில் Scripture Union ஆரம்பிக்கப்பட்டவுடன் தமிழ்நாட்டு VBS முழுநேர ஊழியர்கள் Scripture Unionல் இணைக்கப்பட்டு Scripture Union மூலமாக VBS தொடர்ந்து நடத்தப்பட்டது. மேலும் ஊழியர்கள் முழுநேர ஊழியர்களாக Scripture Unionல் இணைந்தனர். அதில் சகோ. **குணக்குமார்**, சகோ.**சாம்**(கோவை), சகோ.**காலேப்,** சகோ.**எபன்** ஆகியோர் முழுநேர ஊழியர்களாக செயலாற்றினார்கள். இப்போது சகோ.**குணக்குமார்** Scripture Union ஊழியத்திலிருந்து விலகி Rev.குணக்குமாராகி **நற்செய்தி நண்பன்** என்ற ஊழியத்தை சொந்தமாக வெளிநாட்டு ஸ்தாபனங்களின் உதவியுடன் தன் ஊழியத்தை தன் மகனுடன் இணைந்து தொடர்கிறார்.

சகோ.**காலேப்** அவர்களும், தனியாக சிறுவர் ஊழியத்தை ஆரம்பித்துவிட்டார். Scripture Unionல் பெரும்பங்கு வகித்த **Rev.ஜெயசிங்** அவர்களும் பிரிந்து சென்னை வாழ் கிறிஸ்தவ குடும்பங்களிடையே சிறு ஜெப கூடுகையும், ஆலோசனை ஊழியத்தையும் வெற்றியுடன் செய்து கொண்டிருக்கிறார். Rev.ஞானராஜா அவர்களின் **மரண விவரம்** கிடைத்தபோது ஆரம்பகால ஊழிய ஆரம்ப நிகழ்ச்சிகள் என் கண்முன் வந்தது, தேவனை துதித்தேன். சகோ.**ஞானராஜா** அவர்கள் மனந்திரும்பி இரட்சிக்கப்பட்ட அந்த ஆரம்ப காலத்திலேயே பண கஷ்டத்திலும், நெருக்கத்திலும் அவர் வாழ்க்கை ஆரம்பிக்கப்பட்டது.

டேனிஷ்பேட்டையில் **ஆசிரியர் பணி** செய்துகொண்டிருந்தபோதே ஆங்கிலத்தில் பேசவும், பிரசங்கம் செய்யவும் மிகவும் முயற்சி எடுத்தார். கர்த்தரும் உதவினார். வேதாகம கல்லூரியில் அவர் ஆசைப்பட்ட அனுபவங்களை பெற்றார். சில வெளிநாட்டு ஊழியங்களில் பங்கெடுத்தார்.

SUவிலிருந்து விலகி **புதிய பைபிள் டீச்சிங் ஊழியம்** சொந்தமாக தொடங்கினார். அந்த ஊழியத்தை இப்போது அவர் மகன் தொடர்ந்து நடத்திக்கொண்டிருக்கிறார். Rev.ஞானராஜா அவர்கள் இரண்டுமுறை மரணத்தின் வாசல்வரை சென்று திரும்பியவர். **இருதய அறுவை சிகிச்சையின்போது** சரியான ஆயத்தத்துடன்தான் ஆப்ரேஷன் தியேட்டருக்கு சென்றார். சுகமானார். மறுபடியும் ஊழியம் தொடங்கினார். இப்போது கர்த்தர் **நிரந்தரமாக தன்னோடு** அழைத்துகொண்டார்.

சகோதரன் **ஞானராஜ்** அவர்கள் துணைவியார், பிள்ளைகள் அவர் விட்டுப்போன ஊழியம் யாவற்றுக்காகவும் ஜெபிப்போம். **Rev.ஞானராஜ்** அவர்களின் ஊழியத்துக்காக அவர் வாழ்க்கைக்காக தேவனை துதிக்கிறேன்.

## பாரத தேசத்தின் தலைமையின் இன்றைய நிலையும் - அதன் பாதிப்பும்

**துன்மார்க்கர் ஆளும்போது** தேச ஜனங்கள் தவிப்பார்கள். துன்மார்க்கர் பெருகினால் பாவமும் பெருகும். நீதி. 29:2,16

**அதிபதியானவன்** பொய்களுக்கு செவிகொடுத்தால் அவன் ஊழியக்காரர் யாவரும் **துன்மார்க்கர்களாவார்கள்.** நீதி. 29:12

மனுபுத்திரரில் **சண்டாளர் உயர்ந்திருக்கும்போது** துன்மார்க்கர் எங்கும் **சுற்றித்திரிவார்கள்.**

*(இதன் மற்ற விவரங்கள் ஆசிரியர் குறிப்பில் வாசிக்கலாம்.)*

நான் **தேசத்தை** அழிக்காதபடிக்குத் திறப்பிலே நிற்கவும். சுவரை அடைக்கவும் தக்கதாக ஒரு மனுஷனைத் தேடினேன், ஒருவனையும் காணேன். எசே. 22:30

நாம் யாவரும் இணைந்து நம் பாரத தேசத்துக்காக ஜெபித்து நம் ஆண்டவரின் அங்கலாய்ப்பை நீக்க முயலுவோம்.

**MAY 2018**

# Printed Book (Periodical)

**RNI Reg. No. TNBIL/2016/70171**

**Annual Subscription:**
**India - Rs.60/**
**Foreign - Rs.600/**

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.